Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)



முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை (12.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 043


# வடக்கின் அபிவிருத்திக்காக ஒரு இலட்சம் மில்லியன் செலவு

## மாகாணசபை அமர்வில் ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கின் அபிவிருத்திக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு இலட்சம் மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டிருக்கிறது. இது இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வடபகுதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை விட அதிகளவானதாகும் என்று வடக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வு நேற்றைய தினம் மாகாண சபையின் கைதடியில் உள்ள பேரவை செயலகத்தில் இடம்பெற்றபோது அங்கு முதன்மை உரை நிகழ்த்திய வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்தும்போது,

அரசியலமைப்பானது மாகாண எல்லைகள், நிர்வாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்கள் பற்றி தெளிவாக விளக்குகிறது. மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள நீங்கள் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றுமுகமாக இப்பிராந்தியத்தின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டமூலம் என்பவை பற்றிய தெளிவான அறிவையும் விளக்கத்தினையும் கொண்டிருப்பது அவசியமாகும்.

எமது அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளானது தமது எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்யும் பொருட்டு மத்திய அரசின் உதவிகளையும் ஒத்தாசையையும் பெறவேண்டியுள்ளது.

உதாரணமாக மாகாண சபையை நடத்துவதற்குரிய நிதியை ஒவ்வொரு ஆண்டிலும் தேசிய வரவு - செலவுத் திட்டத்திலிருந்து பெறவேண்டியுள்ளமையை குறிப்பிடலாம். அதேபோல வெளிநாட்டு நிதியுதவியுடன் எந்தவொரு அபிவிருத்தித்


(19) ஆம் பக்கம் பார்க்க


## 4 பிரேரணைகள் நிறைவேற்றம்

(கைதடி)

வடமாகாண சபை ஒத்திவைப்புப் பிரேரணைகள் நான்கு நேற்று பேரவை ஒத்திவைக்கும் வேளையில் முன்மொழியப்பட்டன.

கல்வியமைச்சரினால் வவுனியா பூவரசங்குளம் ஆரம்பப் பாடசாலைக் கட்டடத்திலும் காணியிலும் உள்ள விசேட அதிரடிப் படையினரை அகற்றி அதனை கல்வி நடவடிக்கைக்காக பெற்றுக்கொள்ளும் பிரேரணை முன்மொழியப்பட்டது.

அத்துடன் வடக்கில் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான உண்மையானதும் முழுமையானதுமான தரவுகள் மற்றும்


(19) ஆம் பக்கம் பார்க்க


## ஆளுநரின் உரை; உறுப்பினர்கள் மூவர் புறக்கணிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வில் இடம்பெற்ற வடக்கு மாகாண ஆளுநரின் உரையை மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மூவர் புறக்கணித்தனர்.

நேற்று மேற்படி மாகாண சபையின் இரண்டாவது அமர்வின்போது முதன்மை உரையை நிகழ்த்துவதற்கு வடக்கு மாகாண ஆளுநருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது மாகாணசபை உறுப்பினர்களான கே.சிவாஜிலிங்கம், ச.அனந்தி, சொ.சுகிர்தன் ஆகிய மூன்று மாகாண சபை


(19) ஆம் பக்கம் பார்க்க


# வன்முறைக் களமான கால்பந்தாட்டப் போட்டி

## வாள்வெட்டில் மூவர் படுகாயம்



(நெல்லியடி)

நெல்லியடி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டப் போட்டி நேற்று வன்முறைக் களமாக மாறி வாள்வெட்டில் முடிவடைந்ததினால் அணி வீரர் உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் நட்சத்திரங்களின் கால்பந்தாட்டப் போட்டி அதன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற போட்டி ஒன்றில் பொலிகண்டி விண்மீன் அணியும், மயிலங்காடு ஞான முருகன் அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் விண்மீன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. தொடர்ந்து பிற்பாதி ஆட்டத்தின் மூன்றாவது கோலை விண்மீன்


(19) ஆம் பக்கம் பார்க்க


07



தொல்லை

08



நிறைவு

11



முதலிடம்!

# சனல் - 4 ஊடகவியலாளர்கள் வந்தவேளை ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

நேற்றைய தினம் இலங்கைக்கு வருகைதந்த சனல் - 4 ஊடகவியலாளர்களுக்கு எதிராக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய ஒன்றுமைக்கான இயக்கமே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் 100 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள், சனல் - 4 ஊடகவியலாளர்களின் வருகையை எதிர்க்கும் சுலோகம் தாங்கிய அட்டைகளை தாங்கியிருந்ததுடன் சனல் - 4 புலிகளின் அட்டூழியங்களை வெளிப்படுத்தத் தவறியுள்ளதாகவும் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

சனல் - 4 ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்கிய அரசாங்கத்திற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களுடைய கோஷங்களை எழுப்பினர்.

சனல்-4 ஊடகவியலாளரும் யுத்த சூன்ய


(19) ஆம் பக்கம் பார்க்க


# மன்மோகன் வராவிட்டாலும் சிறப்பாக நடக்கும் மாநாடு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாததால் மாநாடு நடைபெற மாட்டாது என்று கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. அவர் வராததன் காரணத்தை ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். மாநாடு வெற்றிகரமாக நடைபெறும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச ஊடக மத்திய நிலையத்தை பார்வையிட வந்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


(19) ஆம் பக்கம் பார்க்க


# மாகாண அமர்வில் பரபரப்பு; அநாமதேய துண்டுப்பிரசுரத்தால்

(கைதடி)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் நிகழ்ச்சி நிரல் கோவைக்குள் அநாமதேய துண்டுப்பிரசுரம் ஒன்று வைக்கப்பட்டதால் வட மாகாண சபையில் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று இடம்பெற்ற வடமாகாண சபை அமர்வில் மாகாண சபை உறுப்பினர்களுக்காக வைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரல் கோவைக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அன்பான வேண்டுகோள் என்ற தலைப்பில் அநாமதேய துண்டுப்பிரசுரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இதனை யார் கோவைக்குள் திணித்தது என்று தெரியாது பரபரப்பு ஏற்பட்டது.

“இரா. தேசப்பிரியன்


(19) ஆம் பக்கம் பார்க்க

# தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்; மாகாணசபை முன்றலில் நேற்று



(யாழ்ப்பாணம்)

நிரந்த நியமனம் இதுவரை வழங்கப்படாத தொண்டர் ஆசிரியர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் வடமாகாண சபை முன்றலில் நேற்று போராட்டத்தில் குதித்தனர்.

யாழ்மாவட்டத்தில் 231 தொண்டர் ஆசிரியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. தகுந்த கல்வித் தகைமை இருந்தும் பல நேர்முகத்தேர்வுக்குச் சென்ற நிலையிலும், மற்றைய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். அதுமட்டுமல்ல தற்போதும் தொண்டர்களாகத் இணைக்கப்படுகின்றார்கள். இந்தத் தொண்டர் ஆசிரியர் என்பதற்கு ஏன் எங்களுடன் முற்றுப் புள்ளி வைக்கக்கூடாதா? இது தொடரவேண்டுமா? என அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

தமது பிரச்சினைகள் குறித்த மகஜர் ஒன்றையும் வட மாகாண கல்வி அமைச்சரிடம் கையளித்தனர்.

இது விடயமாகத் தம்மால் உடனடியாக எதுவும் செய்ய முடியாது எனவும், மத்திய அரசுடன் பேசியே இதற்கான தீர்வு காண முடியும் எனவும் கல்வியமைச்சர் தமக்குத் தெரிவித்ததாக போராட்டத்தில் கலந்து கொண்ட தொண்டர் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். (இ)

# இடமாற்றம் பெற்றன கல்விக் கோட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குரிய உடுவில் கல்விக் கோட்டப் பணிமனையும், சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பணிமனையும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்த உடுவில் கல்விக்கோட்டப் பணிமனை, இணுவில் இந்துக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கி வந்த சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிமனை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் புதிதாக அமைக்கப் பட்ட கட்டடத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

உடுவில் கோட்டம் இந்த மாதம் 5 ஆம் திகதியும், சண்டிலிப்பாய்க் கோட்டம் கடந்த செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதியும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு அதிபர்கள், ஆசிரியர்கள் செயற்படுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (06)

# வங்கியிலிருந்து எடுத்த நகை கச்சேரி மினி பஸ்ஸில் மாயம்

(யாழ்ப்பாணம்)

வங்கியில் வைத்த அடைவு நகையை எடுத்துக்கொண்டு யாழ் கச்சேரி பயணிகள் மினி பஸ்ஸில் பயணம் செய்த பெண்ணிடம் இருந்து நகை காணாமற்போயுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கச்சேரியைச் சேர்ந்த பெண்ணாலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் யாழ்.நகர் செலான் வங்கியில் இருந்து தனது பத்துப் பவுண் எடை கொண்ட தங்க நகையை மீளப் பெற்று அதற்கான வங்கி ரசீதினையும், நகையையும் தனது கைப்பையில் வைத்துக்கொண்டு கச்சேரி மினி பஸ்ஸில் பயணித்திருக்கின்றார். திடீரென்று கைப்பையைப் பார்த்தபோது அது காணாமற் போயிருந்ததனை உணர்ந்த அவர் அதிர்ச்சியடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

முன்னரும் யாழ்.கச்சேரி மினி பஸ்ஸில் இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு பயணம் செய்வோர் தம்முடன் எடுத்துச் செல்லப்படும் நகைபோன்ற பெறுமதியான பொருட்களை எடுத்துச் செல்வதனைத் தவிர்த்து அவதானமாகச் செயற்படு வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றது. (பா)

# பெண்ணின் சடலம் மீட்பு; நீதிமன்றமருகே ஆர்ப்பாட்டம்

நாச்சிமார் தேர் முட்டிப் பகுதியில் அண்மையில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட நிலையில், நேற்றுக்காலை யாழ்.நீதிமன்றத்திற்கு அருகாக யாழ்.பெண்கள் அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

யாழ்.நாச்சிமார் கோவில் தேர் முட்டிப் பகுதியில் கடந்த மாதம் 17 ஆம் திகதி கொலை செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்படும் பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப் பட்ட சம்பவத்தின் சந்தேக நபர் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோதே இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பெண்கள் அமைப்புக்களும், சமூக ஆர்வலர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அந்த அமைப்பினர் சுமார் ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை, சந்தேக நபர் யாழ்.நீதிமன்ற நீதவான் சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், விசாரணையின் பின்னர் வழங்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு நீதவானால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (பா)

# தவணைப் பரீட்சை

(சுன்னாகம்)

யாழ்.கல்வித் திணைக்களமும், தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் நடத்தும் க.பொ.த. உயர்தர சகல பிரிவு மாணவர்களுக்குமான தவணைப் பரீட்சை நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (66)

# பார்வையாளர் தாக்குதல்; பாதுகாப்பு ஊழியர்கள் படுகாயம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் வைத்தியசாலையின் நோயாளர்களைப் பார்வையிட வந்தவர்களின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயங்களுக்குள்ளாகினர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 6.00 மணியளவில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குச் சமீபமாக அமைந்துள்ள வைத்தியசாலை நுழைவாயில் ஊடாக நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், பிரசவ விடுதிக்கு தம்மை அனுமதிக்கு மாறு பாதுகாப்பு ஊழியர்களுடன் முறைப்பட்டுக் கொண்டிருந்த சுமார் பத்து வரையான பார்வையாளர்கள் பாதுகாப்பு ஊழியர்கள் மறுத்ததன் காரணமாக அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் காரணமாக இரண்டு பாதுகாப்பு ஊழியர்கள் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தாக்கியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இவ்விடயம் உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதனை அடுத்து தாக்கியவர்களில் இருவர் அவர்களது வீடுகளில் இருந்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதுடன், ஏனைய எட்டுப் பேரை பொலிஸார் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொதுநூலகத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை பிற்பகல் 1.00 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சபைத் தவிசாளர் சி.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வடமகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம், சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் சி.தர்சினி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே. செல்வராணி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் அ.டயஸ், சித்திவிநாயகர் அபிவிருத்திச் சபை செயலாளர் கோ.ஜீவபாலன், கந்தையா கனகம்மா நினைவு நிதியக் காப்பாளர் க.மயில்வாகனம், கைதடி நாவற்குழி உபஅலுவலக ஓய்வு நிலை பொறுப்பதிகாரி செ.தங்கராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில், எழுத்தாளர் வி. முத்துலிங்கம் கௌரவிக்கப்படுவதுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்தல், கனணி அன்பளிப்பும், இணைய வசதிகளை ஆரம்பித்து வைத்தலும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகத்தினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (I-1)

# இளஞ்சைவப் புலவர்; சைவப்புலவர் தேர்வு

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் இளம்சைவப் புலவர், சைவப் புலவர் தேர்வுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் 50 ரூபா காசுக்கட்டளை எடுத்து சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தலைவர், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம், 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 77613 2176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென சங்கத்தின் செயலாளர் செ. கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (06)

# ஏகாதசி தீர்த்தம்

நாகேஸ்வரம், ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை ஏகாதசித் தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன், பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்பு சமயச்சொற்பொழிவு இடம்பெறும். (68)


## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் வரவு-செலவுத் திட்டம் - 2014

**2014 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய வருமான மதிப்பீட்டினையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு-செலவுத் திட்டம் 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு மாநகரசபை அலுவலகம், 585/5, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் பிரதான பொது நூலகம், 15, முற்றவெளி வீதி, யாழ்ப்பாணம். ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தின்போது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.**

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C/2584)

# சிறுவர்களை எப்படிக் கண்காணிப்பது?

## குறுந்திரைப் படத்தை வெளியிட ஏற்பாடு

### யாழ்- அரச அதிபர்



பாடசாலை மற்றும் பொது இடங்களில் சிறுவர்கள் தம் உரிமைகளை பாதுகாக்க எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் அந்தச் சிறுவர்களின் பாதுகாவல்களாக இருப்பவர்கள் எவ்வாறு கண்காணிக்கப்பட வேண்டும் என்கின்ற குறுந்திரைப்படம் மாவட்ட ரீதியில் வெளியிடப்படவிருப்பதாக யாழ.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக சர்வதேச சிறுவர் முதியோர் மாற்றுவலுவுடையோர் தினவிழா அண்மையில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தம் உரையில் மேலும் தெரிவித்ததாவது,

சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்ற [illegible]த்த குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்ற [illegible]யத்தில் அந்தச் சிறுவர்களின் உரிமைகள் மறுப்பதற்கான குறைபாடுகளும் உள்ளது என்ற விடயம் எமக்கு தெளிவுபடுத்துகின்றது. ஆகவேதான் சிறுவர்கள் தொடர்பான எத்தனையோ வகையான நடவடிக்கைகளில் இந்த அரசாங்கம் கிராம, மாவட்ட, மாகாண ரீதியாக பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் பெற்றோர்கள் மட்டுமல்ல சிறுவர்கள் தாம் வாழும் சூழலில் உள்ள பாடசாலையில் ஆசிரியராலும் விளையாட்டுக் கழகத்தில் நண்பர்கள் மற்றும் உறவினர்களாலும் அறிவுரைகள் கூறி வளர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் வீடுகளில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுடன் அன்னியோன்னிய உறவையும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் எனப்படுபவர்கள் கால சுழற்சியில் இருப்பவர்கள் இதிலிருந்து யாரும் தப்ப முடியாது அனைத்துப் பருவங்களையும் கடந்து வந்தவர்கள் இந்த முதியவர்கள் இவ்வாறு முதுமையடைந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களே முதியவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு தவறிவிடுகிறனர். இதுதொடர்ந்து வந்தால் இந்தச் சமுதாயம் பேரழிவை சந்திக்கநேரிடும். இவ்வாறான நிலையை தவிர்ப்பதற்கு இன்று சிறுவர்களாக இருப்பவர்கள் முதியவர்களை மதிக்க வேண்டும்.

மேலும் மாற்றுவலுவுடையவர்கள் தத்தமது திறமைகளை ஏதோவொரு வகையில் வெளிக்காட்டிக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அவர்கள் அனுபவத்தால் ஆற்றல்களை வெளிக்கொண்டுவருகின்றார்கள். அவர்களும் சமூகத்துக்கு வேண்டியவர்கள் தான். சிறுவர்களாக இன்று இருப்பவர்கள் முதியவ்ர்களை மாற்றுவலுவுடையவர்களை மதித்து எதிர்காலத்தில் நல்லதொரு பிரஜைகளாக வாழ வேண்டும் எனக் கூறினார்.

(116)

# குண்டும் குழியுமாக காணப்படும் அளவெட்டி விளான் வீதி

அளவெட்டி-விளான் வீதி போக்குவரத்து செய்ய முடியாதளவிற்கு குண்டும் குழியுமாக மிகமோசமாக சேதமடைந்துள்ளது.

அளவெட்டி அலுக்கைப் பகுதியில் இருந்து விளான் சந்திவரையிலான சுமார் நான்கு கிலோ மீற்றர் வீதி சேதமடைந்த [illegible]லையில் தற்போது மழை நீர் தேங்கி நிற்பதால் வீதியில் பிரயாணம் செய்யும் மாணவர்கள் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் யாழ்.பஸ்நிலையத்திற்கும் இளவாலைக்கும் இடையில் நடைபெறும் 764 ஆம் இலக்க போக்குவரத்து சேவை பஸ் தினமும் இரு சேவையினை இவ் வீதியூடா கவே சென்று வருகின்றன.

இந் நிலையில் இப்போக்குவரத்துச் சேவையை பெறுவதற்காக மக்கள் இவ் வீதிக்கு வரும் நிலையில் மழைக்காலங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த வீதி விரைவில் திருத்தப்படாது விடின் இளவாலைக்கான போக்குவரத்தும் தடைப்படும் நிலை ஏற்படும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் (66)

# சர்வதேச நல்லொழுக்க தினம் மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

*(தொடர்ச்சி..)*

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

பருத்தித்துறை கோட்டம் மேற்பிரிவு (பேச்சு)

சோ.வைதேகி (யா/வட.இந்து மகளிர் கல்லூரி), ஆ.தமிழினி (யா/வல்லை மகளிர் கல்லூரி), ப.கஜலட்சுமி (யா/புற்றளை மகா வித்தியாலயம்)

கட்டுரை

செ.மனோஜா (யா/தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), தி.கஸ்தூரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

கவிதை

ச.குகதர்சன் (யா.ஹாட்லிக் கல்லூரி), அ.அனுசா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), சி.கோமகள் (யா/புற்றளை மகா வித்தியாலயம்)

(முற்றும்) (109)

**வேகத்தைக் குறையுங்கள் உயிர்களைக் காப்பாற்றுங்கள்**





**வாகனங்களில் பயணத்தை மேற்கொள்வோர் வீதிப்பக்கமாக வாகனத்தின் கதவைத் திறக்கும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்**

(நா.சிவபாலன்)

# தீமைகளே சிலருடைய முதலீடு...




வலி. வடக்கில் மேலுமொரு கட்ட மீளக் குடியேற்றம் நடக்கிறது. இதற்கான பணிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மு. சந்திரகுமாரும் சில்வெஸ்திரி அலன்ரினும் யாழ்ப்பாண மாவட்ட செயலக அதிகாரிகளும் படைத் தரப்பினரும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதைப் பலரும் வரவேற்கிறார்கள். ஆனால், இதை மனந்திறந்து பாராட்ட தமிழ்த் தலைகள் மட்டும் விரும்பவில்லை.

ஆனால், சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களின் முகங்களும் மனங்களும் மகிழ்ச்சியில் மலர்ந்துள்ளன.

மீள்குடியேற்றம் என்பது மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் மனமகிழ் நிகழ்வு.

இவ்வளவு காலமும் அகதி முகாம்களிலும் பிறத்தியாரின் வீடுகளிலும் கிடந்து அவலப்பட்டவர்கள், மீளத் தங்கள் மண்ணுக்குப் போவது என்பது பெருங்கொடை.

இதைத்தான் 'சொர்க்கமே என்றாலும் அது சொந்த ஊரைப் போல வருமா?" என்று சொன்னார்கள்.

இந்த மீள் குடியேற்றத்துடன் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அனைத்து இடங்களிலும் மக்கள் வாழும்நிலை வந்துவிடும் என்கிறார் பிரதேச செயலர்.

நல்லது.

ஊர்களை விட்டு ஓடிய காலங்கள் போய், இப்பொழுது ஊர்களுக்குத் திரும்பும் காலமொன்று வந்துள்ளது.

இதற்காக எவ்வளவு போராட்டங்கள்? எவ்வளவு இழப்புகள், பலிகள், அவலங்கள், அலைச்சல்கள்?

அரசியலில் இரண்டு வகை உண்டு. ஒன்று நன்மைகளை உருவாக்குது. மக்களை வாழ வைப்பது.

மற்றது, தீமைகளை உண்டாக்குவது. மக்களை வீழ வைப்பது.

மக்களுக்கு அவலங்களும் தீமைகளும் பெருகப் பெருக அதைச் சொல்லிச்சொல்லியே அரசியல் செய்வோருக்கு தீமைகளே தேவை. அவர்களுடைய முதலீடே தீமைதான்.

எனவே, அவர்கள் எப்போதும் தீமைகளையே உண்டாக்குவார்கள்.

ஊர்களை விட்டு மக்கள் இடம்பெயர்ந்தால், அகதி முகாம்கள் பெருகினால், சனங்கள் அவலத்தில் வாழ்ந்தால், நாலு சாவு நடந்தால் இவர்களுக்குப் பெருங் கொண்டாட்டம்.

இவற்றைச் சொல்லியே 'பேரரசியல்' நடத்தி விடலாம். இந்தப் பேரரசியல்தான் போர் அரசியலாகவும் மாறியது.

குற்றம் சாட்டுவதற்கு காரணங்கள் தேவையல்லவா!

இதற்குக் குற்றங்கள் மலிய வேண்டும் இவர்களுக்கு.

என்பதால் குற்றங்களைச் செய்யுமாறு சமூகத்தையும் அரசையும் தூண்டுகிறார்கள்.

அமைதி என்பது இவர்களுக்கு பிடிக்காத சங்கதி.

எனவே எதையாவது ஏறுக்கு மாறாகச் செய்வது, அல்லது இளைஞர்களைத்தூண்டுவது என அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

சனங்களையும் சூழலையும் பதற்றத்தில் வைத்திருப்பதே இதன் நோக்கம்.

இதற்கு நல்ல உதாரணம், கடந்த ஆண்டு நவம்பரில் மாவீரர் நாளில் பல்கலைக்கழகத்தில் இளைஞர்களை விளக்கேற்ற வைத்தது.

இதற்குப் பிறகு நடந்தவை எல்லோருக்கும் தெரியும். ஏராளம் பிரச்சினைகள்.

இதனால், இந்த ஆண்டு வேளையுடன் பல்கலைக்கழகம் மூடப்பட்டு விட்டது.

இது சரியான தீர்வல்ல. ஆனால், விளைவு இப்படித்தான் உள்ளது.

இதை எப்படி எதிர்த்து முறியடிப்பது என்று தெரியாமலே குளத்தைக் கலக்கிப் பருந்துக்குக் கொடுக்க முடியாது.

போதாக்குறைக்கு மாவீரர் மயானங்கள் சிரமதானம் செய்யப்படும் என்ற தீர்மானங்களால், இப்பொழுது அந்த இடங்களும் பறிபோய் விட்டன.

இதெல்லாம் புத்திபூர்வமான நடவடிக்கைகள் அல்ல.

நியாயமான காரியங்களும் அல்ல.

ஆனால், இவை திட்டமிடப்பட்டே செய்யப்படுகின்றன.

'ஊர் இரண்டு பட்டால் அரசியலாடிக்குக் கொண்டாட்டம்' என்று தெரியாமலா சொன்னார்கள்?

இவர்களுடைய இந்தத் தந்திரத்துக்கு தெரிந்தும் தெரிந்தும் மக்கள் பலியாகுவதுதான் கொடுமை. சகிக்க முடியாதது.

பாருங்கள், வலி. வடக்கில் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்று ஒப்பாரி வைத்தவர்கள், இப்போது சத்தமில்லாமல் படுத்திருக்கிறார்கள்.

அட மக்கள் தங்களின் ஊர்களுக்குத் திரும்புகிறார்களே என்று மகிழ்ந்து ஒரு வார்த்தை பேசவில்லை. இப்படியான ஒரு நல்ல நிலை உருவாகியுள்ளது என இதற்குப் பொறுப்பானவர்களைப் பாராட்டவும் இல்லை.

உண்மையில் வலி. வடக்கில் மட்டுமல்ல. எந்த ஒரு மீள் குடியேற்றத்தையும் இதய சுத்தியுடன் இவர்கள் விரும்பவில்லை.

சனங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பினால், பிறகு மெல்ல மெல்ல அங்கே தங்களின் வாழ்வைக் கட்டியெழுப்பத் தொடங்கி விடுவார்கள். நிலைமை சீராகி விடும்.

பிறகு, எப்படி அவலத்தைப் பற்றியும் துயரத்தைப் பற்றியும் பேசமுடியும்?

எனவேதான் எப்போதும் சனங்களின் தலைகளுக்குத் தீ வைக்கப்படுகிறது.

மனிதகுல முன்னேற்றத்திற்காக மனிதன் உழைக்கிற இடமே உயர்ந்த கோயில். - ஸ்டிலி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தொடரும் பொருளற்ற போராட்டங்கள்...

வட மாகாண சபையின் இரண்டாவது கூட்ட அமர்வு நேற்று நடைபெற்றது. மாகாண சபைகளின் சம்பிரதாய மரபுகளின் படியான மாகாண ஆளுநரின் உரை நேற்றைய அமர்வின் விசேட அம்சமாக இடம்பெற்றது.

சபைக்கு வந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்களில் மூவர் ஆளுநரின் உரை இடம்பெற்ற சமயம், அதைப் புறக்கணிக்கும் முகமாக சபையிலிருந்து வெளிநடப்புச் செய்து உரை முடிந்த பின்னர் மீண்டும் வந்தமர்ந்தனர்.

உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், சுகிர்தன் ஆகியோரே இவ்வாறு ஆளுநர் உரையைப் பகிஸ்கரித்தவர்கள் ஆவர்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக, ஜனாதிபதியின் பிரதிநிதியாக விளங்கும் ஆளுநரின் உரையைப் புறக்கணிப்பது என முடிவு செய்ததாக சிவாஜிலிங்கம் அவர்கள் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். அரசாங்கம் செய்துகொண்டிருக்கும் குற்றங்களை விளக்கி எழுதி, அத்தகைய அரசாங்கத்தின் பிரதிநிதியாகிய ஆளுநரின் உரையைத் தாம் புறக்கணிப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஒவ்வொரு ஆளுநர் மாகாண சபையின் சட்ட விதிகளின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். புதிய மாகாண சபை ஆட்சியின் தொடக்கத்தில் அந்த மாகாண ஆளுநரின் தொடக்க உரை நிகழ்த்தப்பெறுவதும் மரபு.

மற்றெல்லா மரபுகளையும் ஏற்று மாகாண சபையை நடத்திக்கொண்டு, ஆளுநரின் உரையை மட்டும் மாகாண ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சிலர் புறக்கணிக்கின்ற நாடகம் எதற்காக? மத்திய அரசு வகுத்த சத்தியப்பிரமாண வாசகங்களைச் சொல்லி ஏற்று, இந்த நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு விசுவாசமாக இருப்போம் என உறுதிமொழி எடுக்க எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஆளுநரின் சம்பிரதாயபூர்வ உரையைக் கேட்க மட்டும் எதிர்ப்புத் தெரிவிப்பதில் என்ன பொருளிருக்கிறது?

மாகாண சபை சட்டவிதிகள் மரபுகளின்படி அதன் உறுப்பினர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் வாகனங்கள் சம்பளங்கள் பாதுகாப்புகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கின்றபோது, ஆளுநர் உரை மரபை மட்டும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று காட்டுவது என்ன வகையான எதிர்ப்பு?

ஆளுநரை மாற்றவேண்டும் என்பதுதான் நோக்கம் என்றால் சபையில் தீர்மானம் கொண்டுவந்து அதைக் கோருவது வேறு. அதாவது இந்த 'போராட்ட' உறுப்பினர்கள், ஆளுநரை மாற்றும் வரை சபைக்கு வரமாட்டோம் என்று போராடினால் அதை புரிந்துகொள்ளலாம்.

அதைவிடுத்து, இத்தகைய பகிஸ்கரிப்புகள் எல்லாம், கட்சியின் மற்ற உறுப்பினர்களைவிடத் தாங்கள் தீவிரவாதிகள் என்று காட்டிக் கொள்வதற்காகச் செய்யப்படுவதாக இருக்க வேண்டும் அல்லது கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் தாங்கள் இல்லை என்பதை தங்களது கட்சித் தலைமைக்கு உணர்த்த விரும்பிச் செய்ததாக இருக்க வேண்டும்.

எதுஎப்படியோ மாகாண சபை உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புணர்வை மறந்து இத்தகைய பொருளற்ற போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தால், மக்களுக்கு எந்தப் பயனும் விளையப் போவதில்லை. மாகாண சபையைப் பொறுப்பாகப் பயன்படுத்திச் செய்ய எவ்வளவோ காரியங்கள் உண்டு.

உறுப்பினர்கள் அதில்தான் தங்கள் மேலான கவனத்தைக் குவித்து, சீரழிந்த நம் வாழ்வைச் சீராக்கிக்கொள்ள உதவுவார்கள் என்று வாக்களித்த மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

- ஆசிரியர்.

# பொதுநலவாய மாநாடு தொடர்பாக குறுந்தகவல் சேவை ஆரம்பம்

(கொழும்பு)

பொதுநலவாய மாநாடு தொடர்பாக குறுந்தகவல் சேவையை அரசாங்க தகவல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

பொதுநலவாய மாநாடு தொடரபாக நாடுமுழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு தகவல்களை உடனுக்குடன் தெரியப்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த குறுந்தகவல் சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்தார்.

மொபிற்ரெல் மற்றும் டயலொக் ஆகிய சேவைகளினூடாக இந்த குறுந்தகவல் சேவையை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

மொபிற்ரெல் இணைப்பாளர்களாயின் REG (space)DGI என்று டைப் செய்து 2299 என்ற இலக்கத்துக்கு அனுப்பி இந்த குறுந்தகவல் சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறே டயலொக் இணைப்பாளர்களாயின் INFO என்று டைப் செய்து 678 என்ற இலக்கத்துக்கு அனுப்பி இந்த குறுந்தகவல் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# வேறு இடத்தில் குடியமர்த்துமாறு தம்பனை மக்கள் கோரிக்கை

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வரும் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் கிராம மக்கள், தங்களை உடனடியாக வேறு இடத்தில் குடியேற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோ நோகராதலிங்கம் ஆகியோருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் அக்கிராம மக்கள் மேலும தெரிவித்துள்ளதாவது, தம்பனைக்குளம் கிராம மக்களாகிய நாங்கள் 1997, 1998 ஆம் ஆண்டுகளில் யுத்தம் காரணமாக களிமோட்டை, ஜீவநகர், கற்கிடந்தகுளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையங்களில் வசித்து வந்தோம்.

எங்களை 2007 ஆம் ஆண்டு தம்பனைக்குளம் கிராமத்தில் மீள் குடியேற்றம் செய்தனர். மீள் குடியமர்த்தப்பட்டு 6 ஆண்டுகளில் 2 தடவைகள் வெள்ளப்பெருக்கின் காரணமாக இடம்பெயர்ந்துள்ளோம். இதனால் இந்த தம்பனைக்குளம் கிராமம் தொடர்ந்தும் மக்கள் வசிப்பதற்கு ஏற்ற சாதகமான இடமாக இல்லை. இதனால் வேறு இடத்தில் குடியமர்த்தக்கோரி மடு உதவி அரசாங்க அதிபர், அமைச்சர், ஆளுநர் உட்பட பலரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

ஆனால் இதுவரை எவ்வித முடிவும் இல்லை. இக்கிராமத்தில் வசிக்கின்ற நாங்கள் அன்றாடம் கூலி வேலை செய்து எங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். ஆகவே சிறு கைத்தொழில்கள் மற்றும் தோட்டங்களை வைத்து வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பக்கூடிய இடமாக நாங்கள் கருதும் மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 2, 3 ஆம் கட்டைக்கு இடைப்பட்ட பகுதியில் எங்களை மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என தம்பனைக்குளம் கிராம மக்கள் தங்களது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

## ஊடக மத்திய நிலையத்திற்கு அமைச்சர்கள் விஜயம்

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள ஊடக மத்திய நிலையத்துக்கு தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட முக்கிய அமைச்சர்கள் நேற்று விஜயம் செய்தனர்.

ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை அமைச்சர்கள் நேரில் பார்வையிட்டனர்.

# பொதுநலவாய மாநாட்டு கண்காட்சியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் கைவினை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கைவினைப் பொருட் கண்காட்சியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

நாளை தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கைவினைப் பொருட்கள் கொமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகளின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருளான பன்புல் மூலம் தயாரிக்கப்பட்ட தொப்பிகள், கைப்பைகள், மேசை விரிப்புகள் மற்றும் அலங்கார பொருட்கள் என 25 வகையான பொருட்கள் பார்வைக்கு வைப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உள்நாட்டு தன்னார்வ தொண்டர் அமைப்பான "உலக நண்பர்களின் தேவைகளுக்கான அமைப்பு" யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்த தயாராகி வருகின்றது.

யுத்தத்தினால் அங்கவீனமடைதல், குடும்பத் தலைவரின் இழப்பு உட்பட பாதிப்புக்குள்ளான பெண்களின் நலன்களை பேணும் அமைப்பாக இந்த அமைப்பு செயல்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கு தெரிவான இரண்டு அமைப்புகளில் தமது அமைப்பும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக உலக நண்பர்களின் தேவைகளுக்கான அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ஏரம்பமூர்த்தி கங்காதரன் தெரிவிக்கிறார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் உற்பத்திகளை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு கொண்டு செல்லவும் கொமன்வெல்த் நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையிடுவதற்கும் கிடைத்த சந்தர்ப்பமாக தான் இதனை கருதுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

## பெருந்தோட்ட மக்களின் வாக்குரிமை பிரச்சினை

(கொழும்பு)

பெருந்தோட்டங்களில் பொதுமக்கள் தமது வாக் குகளை பதிவு செய்யும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. இதன்படி, பெருந்தோட்டங்கள் தோறும் மக்களி டையே கருத்துக்கள் பெறப்படவுள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி குறித்த ஆய்வுகளை நிறைவுறுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நுவரெலியா, பதுளை, கண்டி மாவட் டங்களில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வாக்காளர் பதிவுகளின் போது ஏற்படும் நெருக்கடிகள், அதிகாரிகள் எதிர்நோக்கும் நடைமுறை பிரச்சினைகள், இதன்போது முக்கிய காரணங்களாக கொள்ளப்படவுள்ளன.

## ஏற்றுமதி விகிதாசாரம் அதிகரிப்பு

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள், இலங்கையில் இருந்து மாலைதீவுக்கான ஏற்றுமதி விகிதாசாரம் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.


இதேபோல கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாலைதீவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 18 என பதிவாகியுள்ளது. இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு இலங்கை வந்த மாலைதீவினரது எண்ணிக்கை 47 ஆயிரத்து 572 ஆக உயர்வடைந்துள்ளது.

'இலங்கை - மாலைதீவு இருதரப்பு வர்த்தக சபை' இன் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றிய சபையின் தலைவர் ஹுசேன் எஸ். ஹஷீம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வெளிப்படைத் தன்மையைக் கொண்டுள்ள வர்த்தகர்கள், வர்த்த நடவடிக்கைகளை மாலைதீவில் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நல்லிணக்கத்துக்கான ஒரு வடக்குப் பாதை

**முத்துக்கிருஸ்ணா சர்வானந்தா கட்டுரையிலிருந்து**



நான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்(ரி.என்.ஏ) ஒரு விசிறி இல்லை என்றாலும், வட மாகாணசபை தேர்தலில் அது பெற்ற நாடளாவிய வெற்றியை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். ஊழல், குற்றம், குடும்பாதிக்கம், இராணுவமயமாக்கம் மற்றும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அளிக்கும் தனிச் சலுகை என்பனவற்றுக்கு கிடைத்த தோல்வியின் அடையாளம் அது.

எனினும் அது ஒரு நீண்ட நெடுஞ்சாலையின் ஆரம்பம் மட்டுமே. ரி.என்.ஏ இந்த பொன்னான வாய்ப்பைப் பயன்படுத்தி எல்.ரீ.ரீ.ஈ செய்ததை போல, சந்திரனையும் சூரியனையும் கேட்டு அதை விரயமாக்கி விடக்கூடாது, 1985 (திம்பு பேச்சுவார்த்தை) முதல் 2009 (உள்நாட்டு யுத்த முடிவு) வரையான 25வருட காலத்துக்குள் எல்.ரீ.ரீ.க்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒற்றைச் சந்தர்ப்பத்தையும் அது இப்படித்தான் வீணாக்கியது. தமிழ்ச் சமூகமானது விடுதலையில் மறைமுக நாட்டம் கொண்டிருக்கையில், ரி.என்.ஏயும் கூட ஜனாதிபதி ராஜபக்ஸவை பின்பற்றி கடந்த காலத்தை ஒதுக்கிவிடக்கூடாது, மற்றும் வடமாகாண மக்களிடமிருந்து முன்னெப்போதும் இல்லாதவாறு மிகப்பெரிய ஆணை கிடைத்துவிட்டது என்று வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபடக்கூடாது.

உண்மையான அரசியல் தலைவர்கள் வெற்றியில் பெருந்தன்மையுடனேயே இருக்க வேண்டும், இதுதான் மே 2009இல் எல்.ரீ.ரீ.ஈ யை முற்றாக தோற்கடித்த பின்னர் இலங்கை ஜனாதிபதியிடம் கடும் பற்றாக்குறையாக இருந்தது, ஆனால் இந்த எழுத்தாளர் இந்த பெருந்தன்மையைத்தான் வடக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராக ஆகியிருப்பவரிடம் தற்போது எதிர்பார்க்கிறார். இத்தகைய வரலாற்று வெற்றியின் பின்பும் அத்தகைய பெருந்தன்மையை வெளிக்காட்டுவது தமிழ் சிறுபான்மை சமூகத்தினரது நேருக்கு நேரான அரசியல் அபிலாசைகளையின் நெறிமுறைகளை உயர்த்திக்காட்ட உதவும்.

சுயாட்சி உரிமைகளைப்போலவே பொறுப்புகளும் வந்து சேரும். முதலாவதாக வடக்கு மாகாண சபை, வடமாகாணத்தில் உள்ள சிறுபான்மையினரான முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகத்தினருடன் “விடுதலைப் போராட்டம்” என்றழைக்கப்படும் விடயத்தின்போது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தமிழ்ச் சமூகம் தேசிய அளவில் சம அந்தஸ்தை கோருகிறதென்றால், வடக்கில் பெரும்பான்மையாக உள்ள தமிழ்ச் சமூகம், முன்னுதாரணமாக வடக்கிலுள்ள ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும். தமிழ் சிறுபான்மை சமூகம், இனக்கலவரம் மற்றும் உள்நாட்டு யுத்தங்களின்போது ஏற்பட்ட இழப்புகளுக்கு தேசிய அரசாங்கத்திடம் இருந்து இழப்பீடு கோருமானால், வட மாகாணத்தில் உள்ள தமிழ் பெரும்பான்மை சமூகம், வடக்கில் சிறுபான்மை சமூகங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும், விசேடமாக முஸ்லிம் சமூகத்துக்கு.

வடக்கில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள வடமாகாண சபைக்கு வடக்கில் நடந்தவைகளைப் பற்றி விசாரணை செய்ய வடக்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றுக்கான அரசியல் யாப்பு நிறுவ வேண்டியது அவசியம். உதாரணமாக 1985இல் அனுராதபுரத்தில் பொதுமக்களை கொன்றது, உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலம் முழுவதும் எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த பொதுமக்களின் கொலைகள், 1991இல் வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்களை திரளாக வெளியேற்றியதுடன் அவர்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களையும் மற்றும் உடமைகளையும் கையகப்படுத்தியது, 1985இல் சென்.ஜோண்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜாவில் ஆரம்பித்து 1989இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ராஜினி திரணகம, 1999இல் கலாநிதி நீலன் திருச்செல்வம், 2006இல் திரு. கேதீஸ்வரன் லோகநாதன் வரையான அறிவாளிகள் கொல்லப்பட்டது போன்ற அனைத்தையும் விசாரிக்க வேண்டும். மேலே கூறப்பட்டவை சில உதாரணங்கள் மட்டுமே அதை இன்னும் விரிவாக்கலாம்.

உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தின்போது அநியாயமாக கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் இழப்புக்காக தமிழ் சமூகம், உள்நாட்டு மற்றும் சர்வதேச விசாரணையை கோருமானால், அதே தமிழ் சமூகம், உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலத்தில் அந்தப் பிராந்திய சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மீதான தேவையற்ற கொலைகளையும் மற்றும் தனது சொந்த சமூகத்தை சேர்ந்த அறிவுஜீவிகளின் தேவையற்ற

கொலைகளைப் பற்றியும் புதிதாக தேர்வு செய்யப்பட்ட வடமாகாண சபை மூலம் விசாரணை நடத்த வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

தகுதி அடிப்படையிலான பொது நிர்வாக ஆட்சி, பொதுமக்கள் மற்றும் தனியார் முடிவெடுக்கும் திறன், மாகாணத்தில் பெருநிறுவன ஆட்சி போன்றவற்றை உருவாக்குவதற்காக, வடமாகாணத்தில் ஒரு சம வாய்ப்பு சட்டம் இயற்றப்படவேண்டும். உத்தேச சம வாய்ப்புகள் சட்டம், சாதி, மாற்றுத்திறன், இனம், பாலினம், பிராந்திய தோற்றம், மற்றும் மதம் போன்றவை காரணமாக உருவாகும் பாகுபாடுகளை இல்லாமல் செய்துவிடும்.

இந்த பின்பற்றத்தக்க சட்டமூலம் ஏனைய மாகாண அரசாங்கங்களுக்கும் மற்றும் நாட்டிலுள்ள தேசிய அரசாங்கத்துக்கும் வேற்றுமை கருதாது பின்பற்றத்தக்க மதிப்புள்ள ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

தமிழ்ச் சமூகம் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து கோரி வருகிறது. இப்போது வடமாகாணத்துக்கும் அதன் சொந்த சிறுபான்மை சமூகமான சிங்கள சமூகத்துக்கும்,வடக்கில் சிங்களமொழியை பயன்படுத்துவது தொடர்பாக சம அந்தஸ்து வழங்குவதற்கான ஒரு வாய்ப்பு வந்துள்ளது. மகிந்த ராஜபக்ஸவின் தேசிய சோசலிச ஆட்சியுடன் நேருக்கு நேராக போட்டியிட்டு தார்மீக உயர் நிலையை அடைய வேண்டுமானால், வட மாகாணசபை தேசிய மட்டத்தில் எதைக் கோருகிறதோ பிராந்திய மட்டத்தில் அதை வழங்கவேண்டி உள்ளது.

உதாரணமாக, ரி.என்.ஏ யின் நிருவாகத்திலுள்ள பருத்தித்துறை நகரசபை பகுதியிலுள்ள வீதிப் பெயர்ப் பலகைகள் ஆங்கிலம், சிங்களம், மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலுமுள்ளன, இது வரவேற்கத்தக்கது. எனினும் ரி.என்.ஏ யின் நிருவாகத்திலுள்ள வல்வெட்டித்துறை நகரசபை பகுதியிலுள்ள வீதிப்பெயர்ப் பலகைகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே உள்ளன. பிராந்தியத்திலுள்ள சிறுபான்மையினரது மொழியை பயன்படுத்துவதில் ஏன் இந்தப் பாகுபாடு? இத்தகைய விடயங்களில் ரி.என்.ஏ பொதுவான கொள்கைகளை பின்பற்ற வேண்டும்.

இலங்கை இராணுவம் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் மற்றும் வன்னி பிரதான நிலப்பரப்பு ஆகியவற்றில் பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள தனியார் வீடுகள், சொத்துக்கள், மற்றும் காணிகள் என்பனவற்றை காலி செய்யும்படி ரி.என்.ஏ கோரிவருகிறது. ஆனால் இதற்கு முற்றிலும் முரணாக வஞ்சகமான முறையில் ரி.என்.ஏயின் அரசியல் கூட்டுக் கட்சிகளான புளொட் மற்றும் ரெலோ என்பன வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் தனியார் வீடுகளையும் நிலங்களையும் கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதுடன் இன்றுவரை அதைத் தொடர்ந்து செய்து வருகின்றன. ரி.என்.ஏ தான் போதிப்பதையே பின்பற்றவேண்டும், எனவே இலங்கை இராணுவத்துக்கு ஒரு தார்மீக முன்மாதிரியாக ரி.என்.ஏயின் கூட்டு அரசியற் கட்சிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் வீடுகள் நிலங்கள் என்பனவற்றை காலி செய்து உடனடியாக அதை சட்டபூர்வ உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் (இப்போது அவர்கள் வெளிநாட்டிலிருந்தாலும் கூட).


வடக்கின் அபிவிருத்தியில் விசேடமாக வன்னிப்பகுதியின் அபிவிருத்தியை மேற்கொள்வது தொடர்பான முன்னுரிமைகளை ராஜபக்ஸ அரசாங்கம் மட்டும் தவறாக கையாளவில்லை, அபிவிருத்தி விடயத்தில் தமிழ்ச் சமூகம் கூடத்தான் தவறான முன்னுரிமைகளைக் கொண்டுள்ளது. வறுமையான வன்னிப் பெருநிலப் பரப்பு உட்பட வடக்கு முழுவதும், மத வழிபாட்டுத் தலங்கள், விசேடமாக இந்து ஆலயங்கள் யாவும், தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் வழங்கும் நிதி அனுசரணையுடன் ஆடம்பரமான முறையில் பெரும் பொருட்செலவில் புனரமைக்கப்பட்டு, மீளக்கட்டப்பட்டு வருகின்றன, அதேவேளை வன்னியில் வாழும் மக்கள், குப்பை கூழங்களுக்கிடையில், கழிவறை, சுத்தமானதும் மற்றும் பாதுகாப்பானதுமான நீர், மின்சார விநியோகம் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமற்ற, தகரத்தால் அல்லது கழிமண்ணால் செய்யப்பட்ட குடிசைகளில் வாழ்கிறார்கள்.

**தமிழ்ச் சமூகம் தேசிய அளவில் சம அந்தஸ்தை கோருகிறதென்றால், வடக்கில் பெரும்பான்மையாக உள்ள தமிழ் சமூகம், முன்னுதாரணமாக வடக்கிலுள்ள ஏனைய சிறுபான்மை சமூகங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கவேண்டும். தமிழ் சிறுபான்மை சமூகம், இனக்கலவரம் மற்றும் உள்நாட்டு யுத்தங்களின்போது ஏற்பட்ட இழப்புகளுக்கு தேசிய அரசாங்கத்திடம் இருந்து இழப்பீடு கோருமானால், வட மாகாணத்தில் உள்ள தமிழ் பெரும்பான்மை சமூகம், வடக்கில் சிறுபான்மை சமூகங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு வழங்கவேண்டும், விசேடமாக முஸ்லிம் சமூகத்துக்கு.**

மிருகத் தன்மையான குணம் கொண்ட மக்கள் மத வழிபாட்டுத் தலங்களில் தெய்வீக ஆறுதலை பெறுவதை என்னால் புரிந்து கொள்ளவும் பாராட்டவும் முடிகிறது. இருந்தபோதிலும் அடிப்படை மனிதத் தேவைகள், கவனிக்கப்படாமலும் மற்றும் பூர்த்தி செய்யப்படாமலும் உள்ளபோது, வழிபாட்டு இடங்களுக்கு ஊதாரித்தனமாக செலவழிப்பதில் உள்ள தவிர்க்க முடியாத தார்மீக மற்றும் ஒழுக்க கட்டாயம் என்ன?

வடக்கிலுள்ள மக்களுக்கு விசேடமாக வன்னியில் உள்ளவர்களுக்கு அவசரமாகத் தேவைப்படுவது வேலையற்று இருக்கும் இளைஞர்கள் மற்றும் வெகுஜனங்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய தொழிற்சாலைகள், மற்றும் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யக்கூடிய இடங்கள் என்பனவே.

(18ஆம் பக்கம் பார்க்க)







பொதுநலவாய இளைஞர் மாநாடு நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் உள்ள சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது....

# இலங்கையில் முதலீடு செய்ய சர்வதேச வர்த்தக சமூகம் விருப்பம்

பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள சர்வதேச வர்த்தக சமூகத்தவர்கள், இலங்கையில் முதலீடு செய்ய விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

அரச தலைவர்களது முக்கிய மாநாடு நடைபெறுவதற்கு முன்னோடியாக அம்பாந்தோட்டையில் பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த வர்த்தக பிரதிநிதிகள் ஒன்று கூடியுள்ள நிலையில் இந்த கருத்தை வெளியிட்டுள்ளனர். இலங்கை வர்த்தகர்களுடன் இணைந்து மற்றும் இரு தரப்பினருக்கும் இடையே வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த அவர்கள் தமது ஆர்வத்தை தெரிவித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த வாரம் செக் குடியரசைச் சேர்ந்த வர்த்தக பிரதிநிதிகள், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உயர் மட்ட அதிகாரிகளை சந்தித்து உரையாடியுள்ளனர். இந்த சந்திப்பின் போது, இலங்கையின் முன்னணி வர்த்தகர்கள், செக் குடியரசின் வர்த்தக பிரதிநிதிகளுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# பொதுநலவாய மாநாட்டு செலவுகள் மக்கள் மீது திணிக்கப்படமாட்டாது



பொதுநலவாய நாடுகள் அரச் தலைவர்கள் மாநாட்டுக்கான செலவுகள் மக்கள் மீது திணிக்கப்படமாட்டாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு நன்மை ஏற்படுவதனை பிடிக்காத தரப்பினர் போலிப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

மாநாட்டுக்கான செலவு களை மக்களிடம் அறவீடு செய்து கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது. அரசாங்கம் மக்கள் மீது பொருளாதாரச் சுமைகளை திணிக்காது. எதிரிகள் எவ்வளவு முயற்சித்தாலும் இலங்கை குறித்து உலக நாடுகளின் நன்மதிப்பு வீழ்ச்சியடையவில்லை.

இந்த ஆண்டில் இதுவரையில எட்டு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு விஜயம் செய்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எதிர்காலம் குறித்த நம்பிக்கை பொதுமக்களுக்கு இல்லை

மக்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்றி இருப்பதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

வலஸ்முல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில்

"ஊழல் மிகுந்த அரசியல்வாதிகள் மக்கள் குறித்து கவனம் கொள்ளாது தம்மைப் பற்றி மாத்திரம் சிந்திக்கின்றார்கள். மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கினார்கள். மக்களை ஏமாற்றினார்கள். அதனால் நலன்புரி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. எனவே மக்கள் இன்று எதிர்காலம் குறித்து நம்பிக்கை இன்றி இருக்கின்றனர். இன்றைய நாளைப் பற்றி மாத்திரமே சிந்திக்கின்றனர். நாளைய நாள் குறித்து சிந்திப்பதில்லை. எனவே மக்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின்றி இருக்கின்றனர்.

அரசியல்வாதிகள் தொடர்ந்தும சுகபோகத்தை அனுபவிக்கின்றனர். 100 கிலோ மீற்றர் தூரம் கொண்ட அதிவேக வீதி காலி வரை நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் அதற்கு செலவிட்ட தொகையில் அரைவாசித் தொகை 2ஆம் கட்டமான 26 கிலோமீற்றருக்கு செலவிடப்பட்டுள்ளது.

காலியிலிருந்து மாத்தறை வரை அதிவேக வீதியை நிர்மாணிப்பதற்கு காலி வரை செலவிடப்பட்டதைப் போன்று ஐந்து மடங்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது தான் அதிவேக வீதி விளையாட்டு என்றார்.

# நீதி, சமாதர்னம் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதில்லை



(கொழும்)

இலங்கையின் ஆட்சியாளர்கள் நீதி மற்றும் சமாதானம் தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார். நீதி மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் பொலிஸாரின் கடமை அதற்காக சுயாதீன பொலிஸார் ஆணைக்குழு அமைக்க வேண்டும்

இருந்தபோதும், அது தொடரபில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை கொழும்பு 7 இல் கடந்த வாரம் சூதாட்ட நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் 23 பேருக்கு பொலிஸ்மா அதிபர் இடமாற்றம் வழங்கியுள்ளார்.

சுயாதீன பொலிஸார் ஆணைக்குழு அமைக்கப்படும் பட்சத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் தடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய அரச தலைவர்களது மாநாட்டிற்கு வரும் தலைவர்கள் பார்வையிடுவதற்காக நாடாளுமன்றத்திற்கு அருகில் விலங்கினகாட்சிச்சாலை ஒன்றை அமைத்துள்ளனர். கொழும்பு மாநகரை அழகுபடுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு இல்லை பணத்தை விரயப்படுத்துவதற்கு எதிர்ப்பு வெளியிடுவதாக அஜித் பீ. பெரேரா குறிப்பிட்டார்.

பொதுநலவாய மாநாட்டு ஆரம்பத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தமது கட்சி உறுப்பினர்களுக்கு தத்தமது வருகையை உறுதிப்படுத்துமாறு அழைப்பு வந்ததாக அவர் தெரிவித்தார்.

எனினும் கட்சி உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெற்ற கடிதம் உறுதிப்படுத்துவதற்கான திகதியின் பின்னதாகவே கிடைக்கப்பெற்றதாக அஜித் பீ. பெரேரா மேலும் குறிப்பிட்டார்.

# தாதியர் விடுமுறை இரத்து

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டின் நிமித்தம், தேசிய வைத்தியசாலைகளின் தாதியர்களின் விடுமுறைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி வரை யில் தேசிய வைத்திய சாலைகளின் தாதியர்கள் விடுமுறை பெற முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை தாதியர்கள் சங் கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது சம்பந்தமாக சுகாதார பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவிக்கையில் முக்கிய தருணங்களில் இவ்வாறான அர்ப்பணிப்புகளை மேற்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

—பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு—

# தேசியக் கொடியை பறக்க விடுமாறு பௌத்த மதத்தலைவர்கள் கோரிக்கை

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு நடைபெறும் காலத்தில் தேசிய கொடியை பறக்கவிடுமாறு மக்களிடம் பௌத்த மதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

இலங்கையில் அரச தலைவரகள் மாநாடு நடைபெறுவது மிகப பெரிய வெற்றியாகும். நாட்டின் சகல வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றி, மாநாட்டை கௌரவிக்க வேண்டும்.

நாடு தொடர்பிலான பிழையான கருதுகோள்களை தகர்த்தெறிய இது சந்தர்ப்பமாக அமையும்.

நாட்டுக்கு பாரியளவில் நன்மை ஏற்படுத்தக் கூடிய இந்த மாநாட்டை சில அரசியல் கட்சிகள் பலவீனப்படுத்த முயறசிக்கின்றனர்.

உலகத் தலைவர்கள் நாட்டு விஜயம் செய்ய உள்ள நிலையில் அரசியல் பேதங்களை களைந்து நாட்டின் நன்மதிப்பை உறுதி செய்ய அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என பௌத்த மதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.





தென்பொலிகை குமாரதீபனின் அம்மா தேசவரலாற்றின் படிமம் நூல் அறிமுக விழா கடந்த சனிக்கிழமை கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது... (90)

# கருத்துக்களை அழுத்தமாக கூறும் குறும் படங்கள் வெளிவரவேண்டும்

## பேராசிரியர் க.தேவராசா



(யாழ்ப்பாணம்)

குறும்திரைப்படங்கள் சமூகம் சார்ந்த விடயங்களை ஆழமாகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்த வேண்டும். இத்தகைய குறும்படங்கள் தான் மக்கள் மத்தியில் பிரபல்யமாகின்றது என யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைப் பேராசிரியர் க.தேவராசா தெரிவித்துள்ளார்.

கௌரீசனின் உயிர் உள்ள வரை நட்பிருக்கும் குறும்பட வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் இடம் பெற்றது.

க.ஞானசூரியன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், குறுப்படங்கள் குறித்த விடயத்தை ஆழமாகவும் அழுத்தமாகவும் கூறுவதற்கு வழி செய்வதோடு நேர விரயத்தையும் தவிர்க்க உதவுகின்றது. இணுவில் கிராமம் பல்வேறுபட்ட கலைஞர்களையும் கலைப்படைப்புக்களையும் தந்துள்ளது. இருப்பினும் திரைப்படத் தயாரிப்பில் இன்றுவரை ஒரு வெற்றிடம் இருந்து வந்துள்ளது. அந்த இடத்தை செல்வன் கௌரீசன் நிரப்பி வைத்துள்ளார்.

சமூகத்தில் இடம்பெறும் யதார்த்த விடயங்களை குறுந்திரைப்படங்களூடாக கலைஞர்கள் வெளிக்கொண்டு வர வேண்டும் என்றார். தொடர்ந்து மதிப்பீட்டுரையை நிகழ்த்திய அ.யேசுராசா தனதுரையில், சிங்களத் திரைப் படத் துறையிலே சர்வதேச விருதுகளை வென்ற 20 இற்கு மேற்பட்ட கலை ஞர்கள் இருக்கிறார்கள்.

அவர்களை பின்பற்றி எமது கலைப்படைப்புக்களை நாம் உருவாக்கினால் விரைவில் நாம் வளர்ச்சி காணமுடியும். அந்த வகையில் இக்குறுந்திரைப்படம் இன்றைய யதார்த்தமாக உள்ள மதுபோதைக்கு அடிமையான இளைஞர் கூட்டத்தையும் வெளிநாட்டில் இருந்து வந்த சமூக அக்கறை உள்ள இளைஞனையும் தாம் வாழுகின்ற சூழலையும் பதிவு செய்திருப்பது இக் குறும்படத்தின் சிறப்பு ஆகும்.

இருப்பினும் அதன் தலைப்பு குறிப்பிடும் செய்தி, படத்தில் வலுப்பெறவில்லை.

தொடர்ச்சியான கலந்துரையாடல்களும், செயற்பாடுகளும் எதிர்காலத்தில் இக்குறை பாடுகளைத் தீர்க்க உதவும். எனவே இக் குறும்படத் தயாரிப்புக்கு உழைத்த அனை வரும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்றார். (120,48)

# மதுப்பிரியர்களின் தொல்லை பயணிகள் அசௌகரியம்

(அச்சுவேலி)

இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளில் மதுப்பிரியர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாக பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளிலும் இத்தகையவர்களின் நடமாட்டம் காணப்படுகின்றது.

மதுவை அதிகளவில் அருந்திவிட்டு மது தலைக்கேறிய நிலையில் அதிக சத்தம் போட்டு புலம்புவதாகவும் இது பேருந்தில் பயணம் செய்யும் ஏனைய பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் செயலாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் . நடத்துனர்களுடனும் இவர்கள் முரண்படுவதையும் காணமுடிவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே மது அருந்திய நபர்களை பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கும் நடத்துனர்களும் சாரதிகளும் இவர்களின் செயற்பாடுகளை கவனித்து கட்டுபபடுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.(85)

# அச்சுவேலி வைத்தியசாலைக்கு மேலதிக வைத்தியர் நியமனம்

அச்சுவேலி வைத்தியசாலைக்கு மேலதிகமாக ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார். இவ் வைத்தியசாலையில் முன்னர் ஒரு வைத்தியரே சேவையில் ஈடுபட்டு வந்துள்ளதால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிவந்தனர்.

குறிப்பாக மாதாந்த கிளினிக் நோயாளர்கள் மற்றும் விடுதி நோயாளர்கள் போன்றோருக்கும் இவரே சிகிச்சை மேற்கொண்டுவந்துள்ளார்.

இதனால் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருந்தே சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்லாது வைத்தியர் ஒரு பிரிவினருக்குச் சிகிச்சை அளிக்கும் போது மற்றைய நோயாளர்கள் காத்திருக்க வேண் டிய நிலையும் காணப்பட்டது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

நோயாளர்கள் எதிர்நோக்கிய சிரமங்களை அடுத்து வைத்தியசாலைக்கு மேலதிக வைத்தியரை நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் தற்போது மேலதிகமாக வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதில் இருந்த நெருக்கடி நிலை நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (85,சி)

# மன்னாரில் தொடர் மழை

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்துவருவதால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக மன்னார் சாவற்கட்டு பகுதியிலுள்ள பிரதான வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் வடிகால்வாய்களும் சீரமைக்கப்படாது வெள்ளநீர் குடியிருப்புக்களுக்குள் மேவிப்பாய்வதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சாவற்கட்டு பிரதான வீதி நகரசபையினால் புனரமைக்கப்பட்ட போதிலும் இடைநடுவில் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் மக்களே அதிகளவில் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இதேவேளை கிணறுகள், குளங்களிலும் வெள்ளநீர் தேங்கி காணப்படுவதால் டெங்கு தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (140)

# விபத்துக்களை தடுக்க நடவடிக்கை அவசியம்

யாழ்.கே.கே.எஸ். வீதியில் தினமும் தொடரும் விபத்துக்களால் மக்கள் வீதியில் பயணம் செய்ய அஞ்சும் நிலையே காணப்படுகிறது. இவ்வீதி முழுமையாக காப்பெற் இடப்பட்டுள்ள நிலையில் வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டை மீறிச் செல்வதாகவும் குறுக்கு வீதிகள், ஒழுங்கைகளில் இருந்து வரும் வாகனங்கள் பிரதான வீதியில் திடீரென ஏறுவதாலும் அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இதேவேளை குறுக்கு வீதிகள் பிரதான வீதிகளில் சந்திக்கும் இடங்களில் குறுக்கு வீதி, மற்றும் ஒழுங்கைகளில் சிறிய மேடுகள் அமைப்பதன் மூலம் விபத்துக்களை ஓரளவு குறைக்க முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (66)

# முரசின் இன்றைய பலன்



**(12.11.2013 செவ்வாய்க்கிழமை)**

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி.
சதய நட்சத்திரம் பி.ப. 12.04 வரை
பின் பூரட்டாதி. மரணயோகம் / தசமித்திதி.
இராகுகாலம 03.06 - 04.36 வரை. சுபநேரம 10.36 - 12.06 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இறக்குமதி வரி அதிகரிப்பினால் வாகன விற்பனை வீழ்ச்சிகண்டுகலக்கமடைதல். |
| ரிஷபம் | உறவினருடன் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு நீங்கியதால் பகைமை உணர்வு அற்றுப்போதல், விசேட தேவை உடையவருக்கு தொழிற்பயிற்சி வழங்கும் செயற்றிட்டத்தில் பங்கு கொள்ளல் |
| மிதுனம் | போசாக்குணவு பழுதடைந்ததால் கர்ப்பிணித்தாய்மார்களின் தேகநலம் பாதிப்படைதல், பரீட்சையில் சித்தியடைந்தும் பதவிகிடைக்காததால் உளப்பாதிப்பு மேலோங்கல். |
| கடகம் | பேருந்துச்சேவை சீரின்மையால் பாதிப்புற்று உரிய நேரத்தில் கடமைக்குச் செல்லாதிருத்தல், |
| சிம்மம் | வீதிப்போக்குவரத்தினை மீறிச்செயற்பட்டதனால் அபராதம் விதிப்பு, பிறர் ஆலோசனையைக் கேட்டு செயற்படுவதை விட்டுவிட்டு உங்கள் எண்ணப்படி செயற்படுங்கள். |
| கன்னி | கூடுதல் கட்டணம் அறவிட்டதால் சங்கத்திடம் முறையிடச் செல்லல், ஆமை வேகத்தில் நகரும் செயற்பாட்டை விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடல். |
| துலாம் | காப்புறுதிப்பணம் செலுத்தியும் கடன்பெற இழுபறி நிலையில் இருப்பதால் விசனம், வெளிநாட்டில் தொடர்ந்தும் தங்கியிருக்க விசா அனுமதி கிடைத்தமையையிட்டு மகிழ்வுறல். |
| விருச்சிகம் | வீட்டுத்திட்டம் அமுலாக்கப்பட்டாலும் மூலப்பொருட்கள் கிடைக்காமையால் எட்டாக்கனியாக இருத்தல், |
| தனுசு | சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முன்னோடியாக மருத்துவப்பரிசோதனைக்கு சமுகமளித்தல், நன்மை செய்தும் செய்நன்றி மறந்தவரைப் பற்றி நினைத்து வருந்துதல். |
| மகரம் | கலைஞர்களுக்கு கௌரவம்/விருது/பாராட்டு/பணப்பரிசில்கள் வழங்கல், கவனிப்பு ஆரோக்கியமாக இருந்தபடியினால் ஒப்பந்தவேளையில் திருப்திகாணல். |
| கும்பம் | உள நெருக்கீட்டினால் களேபரம் ஏற்பட்டு கவின் நிலை பாதிக்கப்படல், நகைகளை லொக்கரில் பாதுகாப்பாக வைத்திருந்தபடியினால் நிம்மதியடைதல். |
| மீனம் | செல்போன் பேசுவதை ஒட்டுக்கேட்டிருக்கும் பிதாவுடன் முறுகல் நிலை ஏற்படல், இடமாற்ற மேன்முறையீடு பதிலின்றி இழுத்தடிப்பதனால் விசனமடைதல். |



அமரர் குருநாத் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் தொடரில் இரண்டா மிடத்தைப் பிடித்துக் கொண்ட ஆர்.வி. அணியைக் காணலாம். இப்போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இணுவில் யூத் அணி கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

# 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் வெளியானது போட்டி அட்டவணை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்களுக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விளையாடி முடிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதில் யாழ். மாவட்ட அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் ஒரு பிரிவிலும், யாழ். மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் இன்னொரு பிரிவிலுமாக இடம்பிடித்துள்ளன.

இப்போட்டிகள் மூன்றாம் தவணை பரீட்சையின் பின் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (93)

# ஓய்வை ஏற்றுக்கொள்ளுங்கள் டெண்டுல்கர் உருக்கம்


(மும்பை)

கிரிக்கெட் வாழ்க்கையில் ஓய்வு என்பது சகஜமானது. என் ஓய்வையும் இரசிகர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என சச்சின் கேட்டுக் கொண்டார்.

நான் ஓய்வு பெற இன்னும் சில நாட்களே உள்ளன. 24 ஆண்டுகள் கிரிக்கெட்டுக்காக கொடுத்து விட்டேன். இனி குடும்பத்துக்காக நேரத்தை செலவிட உள்ளேன். இரசிகர்களின் பாசத்தைக் கண்டு நெகிழ்ந்து போகிறேன். சமீபத்தில் மும்பையில் உள்ள எனது நண்பரின் வீட்டிற்குச் சென்றேன். என் வருகையை அக்கம் பக்கத்தினர் தெரிந்து கொண்டனர். உடனே என்னை நோக்கி துடுப்பை உயர்த்தி கௌரவப்படுத்தினர். இதை பார்த்து வாயடைத்துப் போனேன்.

கொல்கத்தா டெஸ்ட் போட்டி நிறைவடைந்த பின்னர் சில வீரர்கள் ஓய்வறையில் அழுதுவிட்டனர். ஓய்வு என்பது என் வாழ்வின் ஒரு பகுதி. அதற்காக நீங்கள் அழ வேண்டாம். அடுத்து வரும் இளம் வீரர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என ,அவர்களுக்கு ஆறுதல் கூறினேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை ரூருடன் ஐயா காலி




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோரின் பதவி நீட்டிக்கப்படமாட்டாது என பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது. இதன் படி, எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் அவரது பதவிக்காலம் நிறைவடையவுள்ளது.

கடந்தாண்டு மார்ச் மாதம் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட டேவ் வட்மோர், 2 வருடகால ஒப்பந்தத்தில் பயிற்றுவிப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் 2014ஆம் ஆண்டு பெப்ரவரியோடு அவரது பதவிக்காலம் நிறைவடையும் போது அவரது பதவிக்காலம் நீடிக்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளதோடு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பாகிஸ்தானைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர் ஒருவரைத் தேடுவதாகவும் தெரியவருகிறது.

டேவ் வட்மோரின் பதவிக் காலத்தில் பாகிஸ்தான் அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்களும், ஊடகங்களும் வட் மோருக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தி வந்திருந்தன. இந்நிலையிலேயே,பாகிஸ்தான் இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரே வட்மோரின் இறுதித் தொடராக அமையவுள்ளது. இந்தத் தொடரின் முடிவோடு இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்டும் தனது பதவியிலிருந்து விலகுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இறுதியில் நடால்



(லண்டன்)

உலக டூர் இறுதி டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு நடால் தகுதி பெற்றுள்ளார்.

உலக தரவரிசையில் முதல் 8 வீரர்கள் மட்டுமே பங்கேற்ற ஏ.டி.பி. உலக டூர் இறுதிச் சுற்று டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதியில் முதல் நிலை வீரர் ஸ்பெயினின் ரபேல் நடாலும், 7ஆம் நிலை வீரர் சுவிஸின் ரோஜர் பெடரரும் மோதினர். இரு முன்னணி தலைகள் மல்லுக்கட்டியதால் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் திரண்டு இருந்தனர்.

வழக்கம் போல் ஆதிக்கம் செலுத்திய நடால் 7-5, 6-3 என்ற நேர் செட்டில் பெடரரை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார். இந்த ஆண்டில் நடாலுக்கு எதிராக ஆடிய 4 ஆட்டங்களிலும் பெடரர் தோல்வியை தழுவியிருப்பது குறிப்பிடத்தக்கது. முதல் முறையாக இந்தப் பட்டத்தை வெல்லும் முனைப்புடன் நடால் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எங்கள் ஜாம்பவான்

(மும்பை)

டெண்டுல்கர் 200ஆவது டெஸ்டில் விளையாடப்போகிறார். அவர் உலக கிரிக்கெட் அரங்கில் ஒரு ஜாம்பவான். அதே சமயம் எங்கள் அணி வீரர் சந்தர்போல் எங்களுக்கு ஒரு ஜாம்பவான் தான். டெண்டுல்கரை வாழ்த்தி கொண்டாடும் அதே வேளையில் தனது 150ஆவது டெஸ்டில் களம் இறங்க உள்ள சந்தர்போலையும் நாங்கள் வாழ்த்தி கொண்டாடுகிறோம் மேற்கிந்தியத்தீவுகள் அணி பயிற்றுவிப்பாளர் ஓட்டிஸ் கிப்சன் தெரிவித்தார்.

## மே.தீவின் ஒரு நாள் அணி அறிவிப்பு

(மும்பை)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பொலார்ட், ரோச் நீக்கப்பட்டனர். இந்தியா வந்துள்ள வெஸ்ட் இண்டீஸ் அணி, 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மே.தீவுகள் அணியின் சகலதுறை வீரர் பொலார்ட்டுக்கு காயம் காரணமாக ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. பவல், வீராசாமி பெருமாள், டியோநரைன் ஆகியோர் ஒருநாள் தொடரில் இடம்பெற்றனர். டுவைன் பிராவோ மீண்டும் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் தொடருக்கான அணி: டுவைன் பிராவோ (கப்டன்), பெஸ்ட், டரன் பிராவோ, ஜோன்சன் சார்லஸ், டியோநரைன், கெய்ல், ஹோல்டர், சுனில் நரைன், வீராசாமி பெருமாள், பாவல், ராம்டின், ராம்போல், டரன் சமி, சாமுவேல்ஸ், சிம்மன்ஸ்.





# ஹட்ரிக் அடித்துக் கலக்கும் றொனால்டோ

போர்த்துக்கலைச் சேர்ந்த கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, 23ஆவது முறையாக ஹட்ரிக் கோல் அடித்துள்ளார்.

ரியல் மட்ரிட் கிளப் அணிக்காகவும் ரொனால்டோ விளையாடி வருகிறார். லா லிகா கால்பந்துப் போட்டியில் ரியல் சோசிடட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் ரொனால்டோ (12, 26, 76 ஆகிய நிமிடங்களில்) ஹட்ரிக் கோல் அடித்தார். இதன்மூலம், கால்பந்து வரலாற்றில் அவர் அடித்த ஹட்ரிக் கோல்களின் எண்ணிக்கை 23ஆக உயர்ந்தது.

28 வயது நிரம்பிய ரொனால்டோ, இந்த சீசனில் 19 போட்டிகளில் விளையாடி 27 கோல்களை அடித்துள்ளார். இதில், 4 ஹட்ரிக் கோல்களும் அடங்கும்.

# ரோகித் முன்னேற்றம்; காரணம் டோனி

ரோகித் சர்மாவின் முன்னேற்றத்துக்கு டோனியே காரணம் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார். ரோகித் சர்மா இன்று சிறந்த துடுப்பாட்ட வீரராக உருவாகியிருக்கிறார் என்றால் அதற்கு டோனிதான் காரணம். இதற்காக டோனியை மிகவும் பாராட்டுகிறேன்.

அணியில் இடம் கிடைக்காமல் தவித்த ரோகித் சர்மாவுக்கு ஒருநாள் போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக அறிமுகம்செய்தார் டோனி. அவரது இந்தப் பரிசோதனை வெற்றிகரமாக அமைந்தது. ரோகித் சர்மா ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வரிசையில் சிறப்பாக ஆடுகிறார். எந்த ஒரு இந்திய வீரரும் 100இற்கும் மேற்பட்ட ஒருநாள் போட்டியில் விளையாடி டெஸ்டில் ஆடாமல் இருந்தது இல்லை. ரோகித்துக்கு டெஸ்டில் வாய்ப்பே கிடைக்கவில்லை. சிறந்த வீரராக கருதிஅவரது திறமையின் மீது நம்பிக்கை வைத்துடோனி டெஸ்டில் அறிமுகம் செய்தார். இதனால் இந்த அனைத்து பாராட்டும் டோனியைத்தான் சாரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# சகாப்தத்திற்கு சமர்ப்பணம்



**கால்** நூற்றாண்டு காலமாக கிரிக்கெட் உலகில் மையம் கொண்டுஆட்டுவித்த புயல் அடுத்த வாரம் கிரிக்கெட் உலகிலிருந்து அஸ்தமிக்கப் போகிறது.

அந்த புயலின் பெயர்... சச்சின் தெண்டுல்கர்.

16 வயது பாலகனாக வீறுநடை போட்டு, நளினமான துடுப்பாட்டத்தால் 40 வயதை எட்டியும் இன்றும் கோடிக்கணக்கான இரசிகர்களின் இதயங்களில் கனவு நாயகனாக வாழ்ந்து கொண்டிருப்பவர். வீரர் என்று நினைக்காமல், கிரிக்கெட்டின் கடவுளாகவே போற்றப்படும் அளவுக்கு சிகரம் தொட்டு நிற்பவர்.

இந்திய அணி தோற்றாலும் பரவாயில்லை, அவர் சதம் அடித்தாலே போதும் என்று வெறிபிடித்த இரசிகர்களையும் சாந்தப்படுத்தும் வசீகரம் கொண்டவர். இந்திய கிரிக்கெட்டின் அடையாளமாக வர்ணிக்கப்படுபவர்.

இப்படி கிரிக்கெட்டுக்காக வாழ்ந்து, கிரிக்கெட்டுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்து, எண்ணற்ற சாதனைகளையும், பெருமைகளையும் சேர்த்து முடி சூடா மன்னனாக விளங்கும் டெண்டுல்கரின் கையில் துடுப்புத் தவழ இருப்பது இன்னும் ஒரு வாரம் தான்.

காயத்தால் விலகும்போது, தற்காலிக ஓய்வு அளிக்கப்படும் போது விரைவில் இந்திய அணிக்கு திரும்பி விடுவார் என்று காத்திருக்கும் இரசிகர்கள், அவர் நிரந்தரமாக விடைபெறுவதை எப்படி ஜீரணிக்க போகிறார்கள்?

டெண்டுல்கர் மட்டும் ஓய்வு பெறவில்லை, கிரிக்கெட்டுக்கு நாங்களும் ஓய்வு அளிக்கிறோம். அவர் இல்லாத கிரிக்கெட்டை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை என்று சமூக வலைதளங்களில் பலர் வேதனையை கொட்டி தீர்த்து வருகிறார்கள்.

ஆனால், எல்லாவற்றுக்குமே ஒரு முடிவு உண்டு அல்லவா? 24 ஆண்டு காலம் இந்திய கிரிக்கெட்டின் சுமை தாங்கியாக இருந்த அவரும் அந்தப் பாரத்தை இறக்கி வைக்க வேண்டாமா?

அதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் தான் நவ.14 முதல் 18 ஆம் திகதி வரை. தான் பிறந்து வளர்ந்த மும்பை மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான தனது 200ஆவது டெஸ்டுடன் அவரது சகாப்தம் முடிவுக்கு வருகிறது.

உலக கிரிக்கெட் அரங்கில் நிச்சயம் இது ஒரு சோகமான நாளாகத் தான் இருக்கும். எது எப்படியோ, உலகில் ஒரே சூரியன், ஒரே சந்திரன் என்பது போல, என்றைக்குமே ஒரே சச்சின் டெண்டுல்கர் தான். அதில் மாற்று கருத்து இருக்க முடியாது. இதுவரை கிரிக்கெட் மூலம் மகிழ்வித்த அவரை நாம் மனதார வாழ்த்தி வழியனுப்பி வைப்போம்.

**டெண்டுல்கர் சுவாரஸ்யம் 40**

◤ இந்திப் படஉலகின் இசை மேதை சச்சின் தேவ் பர்மனால் ஈர்க்கப்பட்டதாலேயே, அவருக்கு சச்சின் என்று அவரது தந்தை பெயர் சூட்டினார்.

◤ வளரும் பருவத்தில், தனது நண்பர் ரமேஷ் பிராட்கியிடம் ரென்னிஸ் பந்தை தண்ணீருக்குள் நனைய வைத்து, தன்னை நோக்கி எறிய வைப்பார். நனைந்திருக்கும் பந்து துடுப்பின் எந்த பகுதியில் பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்காக இந்த வகையில் பயிற்சி எடுப்பார்.

◤இளமைகால பயிற்சியாளர் ரமாகாந்த் அச்ரேக்கர் வித்தியாசமான சோதனை வைப்பார். வலைப்பயிற்சியின் போது, அன்றைய பயிற்சி முழுவதும் ஒரு முறை கூட அவுட் ஆகாவிட்டால் பரிசாக ஒரு நாணயம் வழங்குவார். அவரிடம் இருந்து இப்படி 13 நாணயங்களை சேகரித்து பொக்கிஷமாக வைத்துள்ளார், டெண்டுல்கர்.

◤ டெண்டுல்கர், வேகப்பந்து வீச்சாளர் ஆக வேண்டும் என்று தான் முதலில் ஆசைப்பட்டார். இதற்காக சென்னையில் உள்ள எம்.ஆர்.எப். வேகப்பந்துவீச்சு பவுண்டேசனுக்கு அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் ரென்னிஸ் லில்லியிடம் பயிற்சி பெற வந்தார். ஆனால் குள்ளமான உயரத்தை பார்த்து அவரது ஆசையை நிராகரித்த லில்லி, துடுப்பாட்டதில் கவனம் செலுத்தும்படி திருப்பி அனுப்பி விட்டார்.

◤அமைதியான டெண்டுல்கரை பார்த்து தான் நாம் பழக்கப்பட்டு இருக்கிறோம். ஆனால் அவர் பள்ளிப் பருவத்தில் பெரும் வம்புக்காரராக விளங்கி இருக்கிறார். தான்படித்த பள்ளியில் புதிதாக சேரும் மாணவர்களை கலாட்டா செய்து வம்புக்கு இழுப்பது அவரது வாடிக்கையாகும்.


◤முன்னாள் ரென்னிஸ் ஜாம்பவான் அமெரிக்காவின் ஜோன் மெக்கன்ரோவின் வெறிபிடித்த இரசிகர். சிறுவயதில் அவரை போன்று முடி வளர்த்து, தலையில் பட்டையை (ஹெட் பேண்ட்) கட்டிக் கொண்டு வலம் வருவார்.

◤1987ஆம் ஆண்டு உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த இந்தியா-இங்கிலாந்து இடையிலான ஆட்டத்தின் போது, எல்லைக்கோடு அருகே பந்தை எடுத்து போடும் சிறுவனாக பணியாற்றினார், டெண்டுல்கர்.

◤1988ஆம் ஆண்டு பள்ளிகளுக்கு இடையிலான கிரிக்கெட்டில் சச்சினும், அவரது நண்பர் வினோத் கம்ப்ளியும் இணைந்து 664 ஓட்டங்கள் குவித்து உலக சாதனை நிகழ்த்தியதை கௌரவித்து டில்லி திகார் சிறையில் இரண்டு வார்ட்களுக்கு அவர்கள் இருவரின் பெயர் வைக்கப்பட்டது.

◤சுனில் கவாஸ்கர்தனக்கு பரிசாக வழங்கிய பேடுகளைத்தான் (காலுறை) டெண்டுல்கர் 1989ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் அறிமுகம் ஆன போது அணிந்திருந்தார்.

◤சர்வதேச தரத்திலான ஷூவை முதல் முதலில் அவருக்கு வாங்கி கொடுத்தவர், கிரிக்கெட் வீரரும், அவரது நண்பருமான பிரவீன் ஆம்ரே.



| டெஸ்ட் | |
|---|---|
| போட்டிகள் | 199 |
| ஓட்டங்கள் | 15,847 |
| அதிகம் | 248* |
| சராசரி | 53.86 |
| சதம் | 51 |
| அரை சதம் | 67 |
| பிடிகள் | 115 |
| விக்கெட் | 46 |

◤ மைதானத்திற்கு வரும் போது எப்போதுமே முதலில் இடது கால் பேட்டை (காலுறை) கட்டுவதை சென்டிமென்டாக வைத்திருக்கிறார்.

◤அணியினர் பஸ்சில் பயணிக்கும் போது, இடது பக்கம் முன்வரிசையில் ஜன்னல் ஓரம் தான் எப்போதும் அமருவார்.

◤சச்சின், கங்குலியை பாபு மொஷாய் என்று அழைப்பார். இதற்கு பெங்காலி மொழியில் மூத்த சகோதரர் என்று அர்த்தம். கங்குலி அவரை சோட்டா பாபு என்று செல்லமாக கூப்பிடுவார். இளைய சகோதரர் என்பது இதன் பொருள்.

◤டெண்டுல்கர் வலக்கை துடுப்பாட்ட வீரர், வலக்கை சுழற்பந்து வீச்சாளர் என்பது அறிந்த விடயம். ஆனால் எழுதுவதில் இடக்கை பழக்கம் உடையவர்.

◤தனது முதலாவது ஒரு நாள் போட்டியில் டக்அவுட் ஆன டெண்டுல்கர், முதல் சதத்திற்காக எடுத்துக் கொண்ட ஆட்டங்களின் எண்ணிக்கை 79.

◤ஒரு நாள் போட்டியில் 10அல்லது 99 நம்பர் கொண்ட பனியனை அணிவார்.

**(தொடரும்)**

## டெஸ்ட் போட்டிகளில் பெற்ற சதம்

| இல: | சதம் | எதிரணி | மைதானம் | திகதி | முடிவு |
|---|---|---|---|---|---|
| 01) | 110 | இங்கிலாந்து | மான்செஸ்டர் | 14-08-1990 | சமநிலை |
| 02) | 148 | அவுஸ்ரேலியா | சிட்னி | 06-01-1992 | சமநிலை |
| 03) | 114 | அவுஸ்ரேலியா | பேர்த் | 03-02-1992 | தோல்வி |
| 04) | 111 | தென்னாபிரிக்கா | ஜொகனஸ்பேர்க் | 28-11-1992 | சமநிலை |
| 05) | 165 | இங்கிலாந்து | சென்னை சிதம்பரம் | 12-02-1993 | வெற்றி |
| 06) | 104 | இலங்கை | கொழும்பு | 31-07-1993 | வெற்றி |
| 07) | 142 | இலங்கை | கொழும்பு | 19-01-1994 | வெற்றி |
| 08) | 179 | மே.தீவுகள் | நக்பூர் | 02-12-1994 | சமநிலை |
| 09) | 122 | இங்கிலாந்து | பேர்மிங்காம் | 08-06-1996 | தோல்வி |
| 10) | 177 | இங்கிலாந்து | நொட்டிங்காம் | 05-06-1996 | சமநிலை |
| 11) | 169 | தென்னாபிரிக்கா | கேப்டவுன் | 04-01-1997 | தோல்வி |
| 12) | 143 | இலங்கை | கொழும்பு பிரேமதாச | 03-08-1997 | சமநிலை |
| 13) | 139 | இலங்கை | கொழும்பு எஸ்.எஸ்.சி. | 11-08-1997 | சமநிலை |
| 14) | 148 | இலங்கை | மும்பை | 04-12-1997 | சமநிலை |
| 15) | 155 | அவுஸ்ரேலியா | சென்னை சிதம்பரம் | 09-04-1998 | வெற்றி |
| 16) | 177 | அவுஸ்ரேலியா | பெங்களூர் சின்னச்சாமி | 26-04-1998 | தோல்வி |
| 17) | 113 | நியூசிலாந்து | வெலிங்ரன் | 29-12-1998 | தோல்வி |
| 18) | 136 | பாகிஸ்தான் | சென்னை சிதம்பரம் | 31-01-1999 | தோல்வி |
| 19) | 124 | இலங்கை | கொழும்பு எஸ்.எஸ்.சி. | 28-02-1999 | சமநிலை |
| 20) | 126 | நியூசிலாந்து | மொகாலி | 13-10-1999 | சமநிலை |
| 21) | 217 | நியூசிலாந்து | அகமதாபாத் | 30-10-1999 | சமநிலை |
| 22) | 116 | அவுஸ்ரேலியா | மெல்பேர்ன் | 28-12-1999 | தோல்வி |
| 23) | 122 | சிம்பாப்வே | புதுடில்லி | 21-12-2000 | வெற்றி |
| 24) | 201 | சிம்பாப்வே | நக்பூர் | 26-11-2000 | சமநிலை |
| 25) | 126 | அவுஸ்ரேலியா | சென்னை சிதம்பரம் | 20-04-2001 | வெற்றி |
| 26) | 155 | தென்னாபிரிக்கா | ரெயின் குட் இயர் | 03-12-2001 | தோல்வி |
| 27) | 103 | இங்கிலாந்து | அகமதபாத் | 13-12-2001 | சமநிலை |
| 28) | 176 | சிம்பாப்வே | நக்பூர் | 24-02-2002 | வெற்றி |
| 29) | 117 | மே.தீவுகள் | ஸ்பெயின் குயின்ஸ் | 20-04-2002 | வெற்றி |
| 30) | 193 | இங்கிலாந்து | லீட்ஸ் | 23-10-2002 | வெற்றி |
| 31) | 176 | மே.தீவுகள் | கொல்கத்தா | 03-12-2002 | சமநிலை |
| 32) | 241 | அவுஸ்ரேலியா | எடின் காடின்ஸ் | 04-01-2004 | சமநிலை |
| 33) | 194 | பாகிஸ்தான் | சிட்னி | 29-04-2004 | வெற்றி |
| 34) | 248 | பங்களாதேஷ் | முல்தான் | 12-12-2004 | வெற்றி |
| 35) | 109 | இலங்கை | டாக்கா | 22-12-2005 | வெற்றி |
| 36) | 101 | பங்களாதேஷ் | புதுடில்லி | 19-05-2007 | சமநிலை |
| 37) | 122 | பங்களாதேஷ் | சிட்டங்கொங் | 26-05-2007 | வெற்றி |
| 38) | 154 | அவுஸ்ரேலியா | மிர்பூர் | 04-01-2008 | தோல்வி |
| 39) | 153 | அவுஸ்ரேலியா | சிட்னி | 25-01-2008 | சமநிலை |
| 40) | 109 | அவுஸ்ரேலியா | நக்பூர் | 06-12-2008 | வெற்றி |
| 41) | 103 | இங்கிலாந்து | சென்னை சிதம்பரம் | 15-12-2008 | வெற்றி |
| 42) | 160 | நியூசிலாந்து | ஹமில்ரன் | 20-04-2009 | வெற்றி |
| 43) | 100 | இலங்கை | அகமதாபாத் | 20-12-2009 | சமநிலை |
| 44) | 105 | பங்களாதேஷ் | சிட்டங்கொங் | 18-01-2010 | வெற்றி |
| 45) | 143 | பங்களாதேஷ் | மிர்பூர் | 25-01-2010 | வெற்றி |
| 46) | 100 | தென்னாபிரிக்கா | நக்பூர் | 09-02-2010 | தோல்வி |
| 47) | 106 | தென்னாபிரிக்கா | கொல்கத்தா | 15-02-2010 | வெற்றி |
| 48) | 203 | இலங்கை | கொழும்பு எஸ்.எஸ்.சி. | 28-07-2010 | சமநிலை |
| 49) | 214 | அவுஸ்ரேலியா | பெங்களுர் சின்னசாமி | 11-10-2010 | வெற்றி |
| 50) | 111 | தென்னாபிரிக்கா | ஸ்போஸ்ட் கிளப் | 19-02-2010 | தோல்வி |
| 51) | 146 | தென்னாபிரிக்கா | கேப்டவுன் | 04-01-2011 | சமநிலை |

# எடுத்த படங்கள் என்னாச்சு! கட்டுவனில் நடந்த கதை!!



பொன்.வாதவூ

தொடர்ந்தும் ஒரே கோஷங்களை மட்டும் முன்வைத்தால் எடுபடாது. சில புது கோஷங்களையும் வைக்க வேண்டும் என்பதற்காக கூட்டமைப்பினரால் வைக்கப்பட்ட கோஷம் தான் இராணுவ வெளியேற்றம்.

இந்த கோஷத்தை "பொறுப்பு வாய்ந்த" எமது தமிழ் பத்திரிகைகள் நாளாந்தம் எமது மக்களின் மனதிலே ஆழமாக பதிக்கும் கைங்கரியத்தை செய்து வந்திருக்கின்றன. காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வரும் எமது மக்கள் இவர்களது வெற்று கோஷத்தை நம்பினார்கள். வாக்குகளையும் கொட்டி அதிகாரத்தை இவர்களிடம் கொடுத்தார்கள். உண்மை என்னவென்றால் இராணுவம் சம்பந்தமான அதிகாரம் எதுவும் மாகாண சபைக்கு இல்லவே இல்லை. அதிகாரம் இல்லை என்பது, கொலையாளி இலட்ச கணக்கில் அள்ளி கொடுத்தால் "எனது கட்சிக் காரருக்கும் இந்த கொலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை" என்று வாதிட்டு கொலையாளியை நிரபராதியாக்கி விடுவிக்கும் எமது அப்புக்காத்து தலைமைக்கு தெரியாத ஒன்றல்ல. மிகவும் நன்றாக தெரியும். இருப்பினும் பொய்யிலே பிறந்து பொய்யிலே ஊறி பொய்யிலே வளர்ந்த எமது தலைவர்கள் எமது மக்களை காலங்காலமாக ஏமாற்ற முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தான் இராணுவத்தை வெளியேற்றுவோம் என்ற கோஷத்தை முன்வைத்தார்கள்.

இன்னும் எமது மக்களில் சிலர் குறிப்பாக வலி. வடக்கை சேர்ந்தவர்கள் மீண்டும் தமது சொந்த நிலங்களில் குடியேற முடியாத நிலையிலேயே உள்ளனர். மாகாண சபை தமது செயற்பாடுகளை ஆரம்பித்ததும் கூட்டமைப்பு தலைவர்கள் தங்களை மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியிருக்க ஆவன செய்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தார்கள்.

இந்த நிலையில் தான் கட்டுவன் பகுதியில் இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்களை பார இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்துகொண்டிருப்பதை அவதானித்தனர். கடந்த பல தசாப்தங்களாக தமிழ் தலைவர்கள் அல்லல் படும் எமது மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்றாலும் அவர்களது உணர்ச்சியை தூண்டக்கூடிய அரச விரோத பேச்சுக்கள் பாமரர் தொடக்கம் படித்தவர்கள் வரை அவர்களை நம்ப வைத்தது. இவ்வாறு நம்பியவர்களுக்கு கட்டுவன் சம்பவமானது கூட்டமைப்பினர் சம்பந்தமாக பேரதிர்ச்சியை உண்டுபண்ணியது.

தமிழர் பகுதிகளில் இரத்த ஆறு நித்தம் ஓடாதா அனர்த்தங்கள் நிகழாதா என்று எதிர்பார்த்து வெறு வாயை சப்பிக்கொண்டிருந்தவர்களுக்கு அவல் கிடைத்த மாதிரியிருந்து கட்டுவன் சம்பவம். நீயா நானா முதல் படம் எடுத்து இணைய தளங்களில் வெளியிடுவது என்ற போட்டியில் முண்டியடித்துக்கொண்டு கூட்டமைப்பை சேர்ந்த சிவாஜிலிங்கம், சித்தர், சரா மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் ஸ்தலத்திற்கு விரைந்தனர்...

தற்பொழுது கூட்டமைப்பிற்குள் வெட்டி ஓடுதல், மந்திரிப்பதவிக்கான போட்டி, அதிகாரப்போட்டி போன்றவை மட்டும் நிகழவில்லை. "ஸ்தலத்திற்கு விரைதல்" போட்டியும் அதாவது ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் யார் முதலில் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று படம் எடுத்து இணைய தளங்களில் வரப்பண்ணுவது என்ற போட்டி...

கட்டுவன் சம்பவத்தில் "ஸ்தலத்திற்கு விரைதல்" போட்டியில் சிவாஜிலிங்கம் கட்டுவனுக்கு அண்மையில் இருந்தும் சரவணபவனே முதலிடத்தை பெற்றார். இவ்வாறு தான் 'நாவற்குழி சம்பவத்தின்போது "ஸ்தலத்திற்கு விரைதல்" போட்டியில் சரவணபவன் பக்கத்தில் இருந்தும் ஸ்ரீதரனே முதலிடத்தை பெற்றார்.

தங்களது "புனித கடமையான" வரலாற்று பதிவை மேற்கொள்ளுவதற்காக தமிழ் ஊடகவியலாளர்களும் "உண்மை" செய்தியை உடன் கொடுக்க வேண்டும் என்னும் கடமை உணர்வுடன் பாய்ந்தடித்து மோட்டார் சைக்கிளை முறுக்கிக்கொண்டு சென்றார்கள். மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கியதும் இறங்காததுமாக மரத்தில் ஏறியும் படுத்து கிடந்தும் கட கடவென படங்களை எடுத்தார்கள். பேராசை பெரும் நட்டம்

# பிழையின்றித் தமிழ் 55

– ஞானச்செல்வன் –

**தூய தமிழ்ச் சொற்கள்:**

நம் மக்களின் பேச்சு வழக்கில் பயன்பட்டு வரும் தூய தமிழ்ச் சொற்களை நினைவு கூர்வோம். இவற்றின் பயன்பாடு புதிதாகச் சிலருக்குப் பயன்படும்.

பரிதி, ஞாயிறு (சூரியன்), ஞாலம், உலகம் (லோகம்),

கருவூலம் (பொக்கிஷம்), கருவறை - (கர்ப்பக்கிருகம்),

இழப்பு (நஷ்டம்), ஆக்கம் (இலாபம்), ஊதியம் - (சம்பளம்),

ஆகூழ் - (அதிர்ஷ்டம்), போகூழ் - (துரதிர்ஷ்டம்)

இவற்றுள் இலாபத்தை ஆக்கம் என்றது எவ்வாறெனில்

"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்"

என்னும் திருக்குறளின் துணை கொண்டேயாம்.


"இலாபத்தைக் கருதி போட்ட முதலை இழந்து விடும் செயலை அறிவுடையார் ஊக்கப்படுத்தமாட்டார்" என்பது இதன் பொருள்.

ஆகூழ், போகூழ் என்பனவும் திருக்குறளில் இருந்து எடுத்தவையே.

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி"

தமிழ்ச் சொல்லாகவே நாம் வழங்கும் சில சொற்கள் சரியாக அமையாது இருக்கின்றன. "உடம்பு இப்ப எப்படியிருக்கு?" (நலமா?)

இதற்கு, "பரவாயில்லை" என்று பதில் சொல்லுகிறோம். (இதை ஒரு பாடகர் பருவாயில்லை என்று பாடினார்) இதன் பொருள் என்ன? தாழ்வில்லை அல்லது தாழ்விலை என்று பதில் சொன்னால் பொருள் பொருந்துகிறது. தாழ்விலை என்றால் குறைந்த விலை என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. அதனால் "தாழ்வில்லை" என்றே சொல்வோமே.




படம் எப்படி இருக்கிறது? என்றால், "பரவாயில்லை" என்று பதில் வருகிறது. இச்சொல்லுக்கு, ஏற்கலாம் என்றோ, தாழ்வில்லை என்றோ சொல்லலாமே!

"நிச்சயம்" என்பதை "உறுதியாக" என்று உரைக்கலாம். மருந்து காலாவதியாகிவிட்டது என்பதைக் காலம் முடிந்துவிட்டது என்று கூறலாமே? "எக்ஸ்பயரி" என்பதைக் "காலமுடிவு" எனலாம்.

பல கருவிகளுக்குத் தமிழ்ப் பெயர்கள் உண்டு. அவற்றையெல்லாம் இளம் தலைமுறையினர் அறியாதே இருக்கின்றனர். அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரிகிறது. எடுத்துக்காட்டாக, சுத்தியல் (ஹாமர்), திருப்புளி (ஸ்குரு டிரைவர்), குறடு (கட்டிங் பிளேயர்), ரம்பம் (ஸோ) என்பனவற்றைச் சொல்லலாம்.

ரம்பம், வாள் என்றும் சொல்லப்பட்டது. வாள் பட்டறை என்று மரம் அறுக்கும் இடத்துக்குப் பெயர். திருகு (ஸ்குரு) என்றும் திருகாணி என்றும் (நகை - தோடுகளில் இருப்பது) சொற்கள் நம்மிடையே இன்றும் உண்டு.

பழகு தமிழ்ச் சொற்களை மறந்துவிட்டால், தமிழில் சொல்வளம் - சொற் பெருக்கம் குறைய வாய்ப்புண்டு. கணனி வரவுக்குப் பின் புதிய பல சொற்களும் தமிழுக்கு வந்தன. தொடு திரை, சொடுக்கி, முகப்பக்கம், இணையதளம், வலைமுகவரி, மின்னஞ்சல் இப்படிப் பல உள்ளன. தமிழில் புதிய சொற்களை உருவாக்க வழி இருப்பதால் நாம் பிற மொழிச் சொல்லைப் பெரும்பாலும் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. "டெக்னிக்" என்பதை தொழில்நுட்பம் எனத் தமிழில் சொல்லுகிறோம்.

ஆனாலும் சில போதுகளில் இடர் தோன்றாமல் இல்லை. இருப்புப்பாதை (ரயில்வே)யில் ஓடும் வண்டியை ஆகுபெயராக ரயில் என்றே குறித்தோம். நிலக்கரியில் ஓடிய காலத்தில் புகைவண்டி எனத் தமிழில் சொன்னோம். புகையிரதம் என்றும் சொல்லப்பட்டது. (ரதம் - வடசொல்) இப்போது ரயிலைத் தொடர்வண்டி என்று சொல்லுகிறோம். சிலர் கேட்கிறார்கள்: இரண்டு பேருந்து இணைத்துச் செல்வதும் தொடர்வண்டிதானே? ஒன்றின் பின் ஒன்றாகத் தொடர்வன எல்லாம் தொடர்வண்டிகள்தாமே! வேறு சொல் இல்லையா?

தமிழில் மிதிவண்டி முதலாக, மகிழுந்து (car) வரை எல்லாவற்றையும் வண்டி என்று சொல்லும் முறை உள்ளது. ரயில் என்பதைத் தமிழ் எழுத்துமுறைப்படி இரயில் ஆக்கி, இரயில் வண்டி என்று கொள்ளலாமோ? என்று நினைக்கிறோம். எழுதும்போது "இ" சேர்த்தாலும் சொல்லும்போது ரயில் என்றே சொல்லலாம். அறிஞர்கள் தம் கருத்தை அல்லது வேறு சொல்லை அளிப்பார்களாக.

தீபாவளி என்னும் சொல் தீபம் + ஆவளி என்னும் சொற்களின் சேர்க்கை. தீபங்களின் வரிசை என்று பொருள். தீபம் + ஆவளி இரண்டும் வடசொற்களே. வடக்கே தீபங்களை அடுக்கி வரிசையாக ஏற்றி இன்னும் வழிபடுகிறார்கள். (நாம் கார்த்திகைத் திருநாளில் செய்கிறோம்). தீபாவளியைத் தீப ஒளித்திருநாள் ஆக்கியிருக்கிறோம். ஒளி - தூய தமிழ்ச்சொல் தீபம் வடசொல்லே.

சென்றார்கள். மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கியதும் இறங்காததுமாக மரத்தில் ஏறியும் படுத்து கிடந்தும் கட கடவென படங்களை எடுத்தார்கள். பேராசை பெரும் நட்டம் என்பதை உணர்ந்ததனாலோ என்னவோ ஒன்று இரண்டு பேர் எடுத்த படங்களை தாங்கள் சார்ந்த இணைய தளங்களிற்கு உடனே அனுப்பி விட்டு மேலதிகமாக படங்களை எடுத்துக்கொண்டிருந்தனர். இந்த நேரம் அங்கு வந்திருந்த இராணுவத்தினர் எதற்காக படம் எடுக்கிறீர்கள்? இது இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசம். இங்கு படம் எடுக்க உங்களுக்கு அனுமதியில்லை உடனடியாக அனைத்து படங்களையும் அழித்து விடுங்கள் என கடுமையான தொனியில் கூறினர். ஊடகவியலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சரா தடுத்து நிறுத்துவார் என்ற நம்பிக்கையுடன் சராவை பார்த்தார்கள். சராவோ முழி பிதுங்க இராணுவ அதிகாரியை பார்த்த வண்ணம் நின்றார். பின்னர் அங்கே

...வாதவூரன் கட்டுரையிலிருந்து.

நின்ற மக்கள் பிரதிநிதிகளால் எதுவித பிரயோசனமுமில்லை என்பதை உணர்ந்த ஊடகவியலாளர்கள் அனைவரும் தங்களது படங்கள் அனைத்தையும் இராணுவ அதிகாரியின் முன்னால் அழித்தார்கள். ஏற்கனவே படங்களை அனுப்பியிருந்த ஊடகவியலாளர்களும் பணம் தர தேவையில்லை அனுப்பிய படங்கள் எதையும் பிரசுரிக்காது அழித்துவிடுங்கள் என கெஞ்சி அழிக்கப்பண்ணி விட்டனர். பின்னால் நின்ற...

## முழுமையடைந்த மனிதர் யார்?

- நன்றியுள்ள இதயம்
- சிந்திக்கும் மனம்
- அன்பான புன்னகை
- இனிமையான வார்த்தை
- உதவும் உள்ளம்
- துணிச்சலான செயல்

சிறுவர் கதை:

# விற்ற மரத்தைத் திருப்பிக் கேட்கலாமா?



மன்னர் கிருஷ்ண தேவராயரின் அவைக்கு ஒருவர் வந்தார். அவர் மன்னரிடம், "அரசே, என்னுடைய தோட்டமும் பக்கத்து வீட்டுக்காரர் தோட்டமும் அருகருகில் உள்ளன. இரண்டு தோட்டத்துக்குமிடையில் உள்ள வரப்பில், ஒரு தென்னைமரம் உள்ளது. அந்தத் தென்னை மரத்தைப் பக்கத்துவீட்டுக்காரர் எனக்கு விற்றுவிட்டார். நான் அதைப் பராமரித்து வருகிறேன். இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக் கூடாது என்கிறார். தென்னை மரம் நன்றாக வளர்ந்து பயன் தரும் நிலையில் தன்னுடைய மரம் தனக்குத் திரும்ப வேண்டும்... என்கிறார்."

அதைக் கேட்ட அவையிலிருந்தவர்கள் அனைவரும் திடுக்கிட்டனர்.

அங்கிருந்த அமைச்சர், "விற்ற மரத்தை திருப்பிக் கேட்கும் அந்த மனிதரைக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும்" என்றார்.

உடனே தளபதி, அந்த நபரைக் கைது செய்து வரத் தயாரானார்.

அப்போது மன்னர், "என்ன செய்யலாம்?" என்று கேட்பதைப் போல் தெனாலிராமனைப் பார்த்தார்.

தெனாலிராமன், "தாங்கள் அனுமதி அளித்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளி வைத்துக் கொள்ளலாம்" என்றார்.

மன்னர், "சரி" என்றார்.

தெனாலிராமன் அந்த நபரிடம், "நாளைக்கு உன் பக்கத்து வீட்டுக்காரனையும் அழைத்து வா" என்று சொல்லி அவனை அனுப்பி விட்டார்.

மறுநாள் அந்த நபரும், பக்கத்து வீட்டுக்காரனும் அரசவைக்கு வந்தனர்.

இருவரிடமும் நன்கு விசாரித்த பிறகு தெனாலிராமன் சொன்னார்.

"நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள விரும்புகிறாய் இல்லையா?" என்றார்.

அவன், "ஆம், ஐயா!" என்றான்.

"சரி, நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடு" என்றார் தெனாலிராமன்.

அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டான்.

சபையிலிருந்தவர்களும் மன்னரும் தெனாலிராமன், ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்?" என்று புரியாமல் திகைத்தனர்.

பிறகு தெனாலிராமன் மரத்தை வாங்கியவரிடம், "சரி" இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை" என்றார்.

அந்த மனிதரிடம் ஏமாற்றம் தெரிந்தது.

உடனே தெனாலிராமன் மரம் வாங்கியவனைப் பார்த்து, "அந்த மரம் நீ வாங்கும் போது எப்படி இருந்ததோ, அப்படியே அதை நீ திரும்பக் கொடுத்து விட வேண்டும்" நீ மரத்தை அவரிடம் வாங்கும் போது அம்மரம் காய்க்கத் தொடங்கவில்லை. எனவே, அதைத் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்பு எல்லாக் காய்களையும் பறித்துக் கொண்டு விடு" என்றார்.

திரும்பப்பெற்றவரிடம், "நீ தென்னை மரத்தை விற்பனை செய்த போது காய் இல்லாத மரத்தைத்தானே நீ விற்றாய்"? எனவே, என்றைக்கும் காயில்லாத மரம்தான் உன்னுடையது. அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்தவரையே சேரும்" அதை அவர் பறித்துக் கொள்ள அவ்வப்போது நீ அனுமதிக்க வேண்டும். தடுக்கக் கூடாது, நீயும் பறித்துக் கொள்ளக் கூடாது" என்றார்.

தெனாலிராமனின் புத்திசாலித்தனமான தீர்ப்பை மன்னரும் ஆமோதித்தார்.

# மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணனி!



மனிதனின் மூளையைப் போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் அதிநவீன கணனியை ஐ.பி.எம் நிறுவனம் வடிவமைத்துள்ளது. அதாவது, மனிதனின் மூளையைப் போன்று கணனி ஒருவகை திரவத்தால் சக்தியை பெறுவதுடன் அதே திரவத்தால் தன் வெப்பத்தை நீக்கி குளுமைப்படுத்தி கொள்ளும் திறன் கொண்டதாக இருக்கும். மூளையில் உள்ள குருதிச் சுற்றோட்டத்தொகுதி போன்ற ஒருவகை மின்னணு இரத்தத்தை கணனியின் வழியாக ஓடச் செய்வதன் மூலம் அந்தக் கணனிக்கான சக்தியை அதன் உள்ளே கொண்டு செல்லும். அத்துடன் அதிலிருந்து வெப்பத்தை வெளியேயும் கொண்டுவரும். தற்போதுள்ள கணனிகளில் ஒரு சதவிகிதம் மட்டுமே தகவல்களை பெறுவதற்கு பயன்படுவதாகவும், இந்த புதிய முறை பயன்படுத்தப்பட்டால் சிறப்பான கணனியை தம்மால் உருவாக்க முடியும் என்று ஐ.பி.எம். நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2060ஆம் ஆண்டளவில் முழுமையடையக் கூடிய இந்த முயற்சியின் மூலம், தற்போது மிகப் பெரியதாக இருக்கக்கூடிய கணனியை சிறியதாக உருவாக்கிவிட முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் நடந்த பொது அறிவுப் போட்டியில் இக்கணனி மனித மூளையை தோற்கடித்துவிட்டது. மனித மூளை 20 வோட்ஸ் சக்தியை மட்டுமே பயன்படுத்துகின்றது என்றும், கணனி 85,000 வோட்ஸ் சக்தியை பயன்படுத்துகின்றது இது நியாயமற்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த கேள்விகளுக்கு புதிய மின்னணு இரத்தத்தால் செயல்படும் கணனிகள் பதில் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

# உலகின் கவர்ச்சிப் பெண்!





அமெரிக்காவில் பிரபலமான esquire என்ற பத்திரிகை, "உலகின் செக்சியான பெண் யார்" என்ற கருத்துக் கணிப்பை நடத்தி, அதன் முடிவை சமீபத்தில் வெளியிட்டது. இதில், பிரபல ஹொலிவுட் நடிகை ஸ்கார்லெட் ஜொஹன்சன், முதலிடத்தை பிடித்துள்ளார். 28 வயதாகும் ஸ்கார்லெட், ஏற்கனவே 2006இல் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலும் உலகின் செக்சியான பெண் என்ற பட்டத்தை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், மகிழ்ச்சியில் இருக்கும் ஸ்கார்லெட், "இதுவரை யாருமே இரண்டு முறை இந்தப் பட்டத்தை பெற்றதில்லை. நான் தான் முதல் நபர். இதனால், என் சந்தோஷத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. இந்த நிமிடத்தில், உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியான பெண் யார் என்ற ஆய்வை நடத்தினால், அதிலும் எனக்கு தான் முதலிடம் கிடைக்கும்..." என, பூரிப்புடன் கூறுகிறார்.

# கூன் முதுகு டொல்பின்!



வடக்கு அவுஸ்ரேலியா கடலில் புதிய வகையான கூன்முதுகு கொண்ட டொல்பின் மீன் இனத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்த டொல்பின் மீன் இனத்துக்கு அதிகாரபூர்வமான பெயர் எதுவும் இதுவரை வைக்கப்படவில்லை. பசிபிக் மற்றும் இந்திய சமுத்திரங்களில் வாழும் நூற்றுக்கணக்கான கூன்முதுகு மீன் இனங்களையும் மீன்களின் மண்டையோடுகள் மற்றும் திசுக்களையும் விஞ்ஞானிகள் ஆய்வுசெய்துவருகின்றனர். இந்த ஆய்வுகளின் முடிவிலேயே இந்த டொல்பின் மீன் இனத்துக்கு பெயர்வைக்க விஞ்ஞானிகள் எண்ணியுள்ளனர். இந்த மீன் இனங்களுக்கு முதுகில் உள்ள துடுப்பு போன்ற சிறகுக்கு கீழே கூன் விழுந்திருக்கும். இதுவரை கண்டறியப்பட்டுள்ள மூன்று டொல்பின் இனங்களில் இரண்டு இனங்கள் மீன்பிடி நடவடிக்கைகளாலும் வாழ்விடங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களாலும் அழிவடையும் அபாயத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டுவிட்டர் திணறல்...!



கிளிண்டன் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி. அவர் இந்த வருடம் ஏப்ரல் 6ஆம் திகதிதான் தன்னை டுவிட்டரில் இணைத்துக் கொண்டார். இருந்தும் அவருக்கு எவ்வளவு பின்பற்றாளர்கள் தெரியுமா? 1,147,816 பேர். இவர் மனைவி கிலாரி கிளிண்டனுக்கு 8,04,390 பேரும், மகள் செலசாவுக்கு 3,09,799 பேரும் டுவிட்டரில் பின்பற்றாளர்கள் ஆக உள்ளனர். கிளிண்டன்.. global initiatives என்ற ஓர் அமைப்பை வைத்து, பிரபலங்களை அழைத்துப் பேச வைத்து, அதன் மூலம் பிரச்சினைகளை அலசி அவற்றிற்கு தீர்வும் காண முயற்சிக்கிறார்!

எந்தக் கேள்வி கேட்டாலும் திகைக்காமல் "பளிச்"சென பதில் கூறக் கூடியவர் கிளிண்டன். ஆனால், அவரையும் சமீபத்தில் இந்தக் கேள்வி அசத்தியது. "அமெரிக்காவின் முதன்மைப் பதவிக்கு மனைவி கிலாரியா அல்லது மகள் செலசாவா... யார் சிறந்தவர்?" என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார் கிளிண்டன்.




# தெரிந்துக் கொள்ளுங்கள்!

**உங்கள் செருப்பின் அளவை வைத்தே உங்கள் வயதைக் கண்டுபிடித்து விடலாம்... எப்படி?..**



1. உங்க செருப்பின் அளவை எடுத்துக் கொள்ளவும்
2. அதை ஐந்தால் (5) பெருக்கவும்
3. ஐம்பதை (50) கூட்டவும்
4. இருபதால் (20) பெருக்கவும்
5. ஆயிரத்து பன்னிரெண்டைக் (1012) கூட்டவும்

பிறகு, வந்த விடையுடன் உங்கள் பிறந்த வருடத்தைக் கழிக்கவும்

இப்பொழுது வந்த விடையில் கடைசி இரண்டு இல்க்கம் உங்கள் வயது. முதல் இலக்கம் உங்கள் செருப்பின் அளவு...கணக்கு சரியாக இருந்தால் உங்கள் நண்பர் மற்றும் உறவினர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்...

# ராபர்ட் ரிப்ளே



உலகப் புகழ்பெற்ற ஓவிய மேதையாகத் திகழ்ந்தவர் ராபர்ட் ரிப்ளே. குழந்தைப் பருவத்திலேயே ஓவியம் வரைவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். பள்ளிக்கூடத்தில் எழுதச் சொல்லும்போது படங்களை வரைந்து கொண்டிருப்பார். ரிப்ளே படம் வரைவதை ஆசிரியர் ஒருவர் பார்த்துவிட்டார்.

ரிப்ளேயின் ஓவிய ஆர்வத்தை, வரைந்திருந்த நுணுக்கத்தை உணர்ந்த ஆசிரியர், எனக்கு எழுதிக்கொடுக்க வேண்டிய பாடங்களைப் படித்துப் பார்த்து ஓவியமாகவே வரைந்து கொடுத்துவிடு. அதனை நான் கட்டுரைகளாக ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார். இந்த ஊக்கமே பின்னாளில் ஓவியம் வரையும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். உலகின் எல்லாப் பகுதிகளிலும், இரசிகர்களைக் கொண்டிருந்த ரிப்ளேவுக்கு 30 இலட்சம் கடிதங்கள் வந்திருந்ததாக இவரைப் பற்றிய குறிப்புகளில் காணப்படுகிறது.

# வடதுருவம், தென்துருவம் ஆகியன எப்போதும் பனியால் மூடப்பட்டுள்ளன?




பூமி உருண்டையாக இருப்பதும், பூமி தனது அச்சில் சாய்வாக இருந்தபடி சுற்றுகிறது என்பதும் இதற்குக் காரணம்.

சூரியக் கதிர்கள் சாய்வாக வந்து படும்போது சூடு உறைக்காது. அதுவே செங்குத்தாக வந்து விழும்போது வெயில் வாட்டும்.காலையில் சூரியக்கதிர்கள் சாய்வாக வந்து விழுவதாலும், காற்று மண்டலத்தின் வழியே அதிக தொலைவு கடக்க வேண்டியிருப்பதாலும் காலையில் வெயிலின் கடுமை தெரியாது. மதிய வேளையில் சூரியக் கதிர்கள் செங்குத்தாக வந்து விழுவதால் வெயில் உறைக்கிறது.பூமி கோள வடிவில் உள்ளதால் தெற்கு, வடக்குத் துருவங்களில் சூரியக் கதிர்கள் சாய்வாக வந்து விழுகின்றன. இரு துருவப் பகுதிகளிலும் சூரியன் ஒரு போதும் உச்சிக்கு வருவதில்லை.

மேலும் தென் துருவத்திலும், வடதுருவத்திலும் மாறி மாறி 6 மாதம் பகலாகவும், 6 மாதம் இரவாகவும் உள்ளதால் வடதுருவப் பகுதிகளில் கடுங்குளிர் எப்போதும் நிலவுகிறது.


இவை எப்போதும் உறைபனி படிந்தே விளங்குகின்றன.

# பூமி எப்படி அழியும்?



உலகம் அழிவது என்பது சூரியனிலிருந்துதான் தொடங்கும். சூரியனின் நியுக்ளியர் பாலன்ஸ் (NUCLEAR BALANCE) எனப்படும் அணுக்கருவின் சமநிலை என்றைக்காவது ஒருநாள் சீர்குலைந்து போகும். எப்போது என்றால், 500 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு சூரியனில் இருக்கும் ஹைட்ரஜன் வாயு ஹீலியம் வாயுவாக மாறிப் போகும். அப்போதுதான் சூரியனின் "நியுக்ளியர் பாலன்ஸ்" சீர்குலைந்து வெப்பம் அதிகமாகி சூரியன் விரியும். அவ்வாறு விரியும் சூரியன் தனக்குப் பக்கத்தில் இருக்கும் சுக்கிரன், புதன் போன்ற கிரகங்களை தன்னோடு ஈர்த்துக் கொள்ளும்.

இந்தக் கடுமையான வெப்பத்தின் காரணமாக பூமியில் உள்ள கடல்கள் கொதித்து ஆவியாக மாறும். உயிரினங்கள் அழியும்.



தி.கம்சா - அச்சுவேலி

# முடியுமா....உங்களால்?






எஸ்.ஏ.திவ்யா - ஆனைக்கோட்டை





க.ச.பகலவன்
பண்டத்தரிப்பு



தி.யதுசனா - அச்சுவேலி

# மனித உடலின் உண்மைகள் சில...

1) இதயத்தில் உள்ள இரத்த அழுத்தமானது, இரத்தத்தை 30 அடிவரை பீய்ச்சி அடிக்கும் சக்தி கொண்டது.

2) மனித மூளையில் சுமார் 100,000,000,000 (100 பில்லியன்) நரம்பு செல்கள் உள்ளன.

3) ஒரு மனிதன் 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.

4) நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்ஸிஜனில் 20% மூளைக்கு செல்கிறது.

5) நமது மூளை 80% நீரால் ஆனது.

6) நமது மூளையின் செயல்திறன் பகலைவிட இரவில் அதிகமாக இருக்கும்.

7) நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடிதான்.


8) மனித தலையில் சராசரியாக 100,000 தலைமுடிகள் இருக்கும்.

9) பெண்கள் கருத்தரிக்கும் பொழுது, கர்ப்பப்பையானது, அதன் சாதாரண நிலையை விட 500 முறை விரிவடைகிறது.

10) மனித உடலில் உள்ள கல்லீரலானது 500 விதமான வேலைகளைச் செய்கிறது.

# பருத்தித்துறை நவீன சந்தையில் நிலவும் குறைபாடுகளைத் தீர்க்க கோரிக்கை





(வடமராட்சி)

பருத்தித்துறை நகர மையப் பகுதியில் கட்டப்பட்டு எழுகை பெற்றுள்ள புதிய நவீன சந்தை தொகுதி கட்டடத்தின் முகத்து வாரத்தில் முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைக்கப்படுவதால் வியா பாரத்துக்கு நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இரு தளங்கொண்ட புதிய நவீன சந்தைத் தொகுதிக்கென நெக்டெப் திட்டத்திலிருந்து 100 மில்லியன் ரூபா செலவில் முதலாவது தளம் கட்டப்பட்டுள் ளது.

இரண்டாவது தளம் பொரு ளாதார அபிவிருத்தி அமைச் சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்திலிருந்து 70 மில்லிய னுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட் டில் கட்டப்பட்டுள்ளது.

நவீன முறையிலான பல்பரி மாணங்களுடன் கட்டப்பட்ட சந்தைத் தொகுதியை பருத்தித் துறை நகரசபைக்கு கையளிக் கப்பட்டுள்ள போதிலும் நகர சபை அடிப்படை வசதிகள் பெற்றுக் கொடுக்காமல் கீழ்த்தளத் தொகுதியில் கடைகளை வாட கைக்கு வழங்கியுள்ளது.

குறிப்பாக கீழ்த்தளத்தி லுள்ள மலசலகூடத்துக்கு நீர் வசதிகள் இல்லாமல் பூட்டப்பட்ட நிலையில் கட்டடத் தொகுதி யின் உள்ளக சுற்றாடலில் ஆங் காங்கே சிறுநீர் கழிக்கப்படுவ துடன் முகத்துவாரத்தில் பருத் தித் துறை நகர முச்சக் கரவண்டிகளும் ஒழுங்கீனமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பல மில்லியன் ரூபா செல வழித்துக் கட்டப்பட்ட மேற்படி புதிய நவீனசந்தைக் கட்டடத் தொகுதிக்கென இரவு பகலாக காவலாளிகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இச்சமயத்திலே சந்தைத் தொகுதியில் இடம்பெறும் சுகா தாரமற்ற செயற்பாடுகளால் துர்நாற்றம் வீசுகிறது.

எனவே பாரிய நிதிச்செல வில் சந்தைக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ள நிலையில் மலசலகூட வசதிகளை ஏற் படுத்தி நீர்ப்பிரச்சினையை சீர் செய்வதற்கு பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

# சரசாலை பொதுநூலகத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை யின் சரசாலை பொது நூலகத் தினரால் தேசிய வாசிப்பு மாதம் மற்றும் உள்ளூராட்சி வாரம் ஆகியவற்றினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

கதைகூறல்

சூ.தேனிலா (வீரசிங்கம் மத் திய கல்லூரி), அ.மதுரா (மட்டு வில் சந்திரமௌலீச வித்தி.), அ.அபர்ணா (மட்டுவில் கமலா சினி வித்தி.).

சி.கம்சனா (மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), கு.அச னிகா, ம.டினோசன் (வீரசிங்கம் மத்திய கல்லூரி).

பேச்சுப்போட்டி

பிரிவு II

தே.தீபிகா, க.லாவண்யா, வி.பவி னையா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி).

கட்டுரை - பிரிவு IV

த.பாசுபதன், செ. கிந்தியா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி). த.கஸ்தூரி (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

பேச்சுபோட்டி

ச.நிருஷனா, ர.திலக்சன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல் லூரி), அ.சாம்பவி (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி). (11)

# பொதுநலவாய மாநாடு கட்டுரைப் போட்டி

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பான கட்டுரைப்போட்டி ஒன்றினை நடாத்துவதற்கு வீரகேசரி நிறுவனம் முன்வந்துள்ளது.

நவம்பர் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கை யில் நடைபெறும் பொதுநல வாய நாடுகளின் உச்சிமாநாடு நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் பாரிய உந்து சக்தியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

“பொதுநலவாய மாநாடு நாட்டின் பொருளாதார வர்த்தக மேம்பாட்டில் எத்தகைய தாக்கத்தை உண்டு பண்ணும்” என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி இடம்பெறவுள்ளது.

சுயாதீன நடுவர் குழுவினால் சிறந்த 3 கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு படைப்பாளிக ளுக்கு பணப் பரிசில்கள் வழங் கப்படுவதோடு கட்டுரைகள் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

முதலாவது பரிசு 50 ஆயிரம் ரூபா, இரண்டாவது பரிசு 30 ஆயிரம் ரூபா, மூன்றாவது பரிசு 20 ஆயிரம் ரூபா.

கட்டுரைகள் 750 தொடக்கம், 1000 சொற்களுக்கு உட்பட்ட தாக வீரகேசரியில் வெளிவரும் கூப்பனையும் வெட்டி ஒட்டி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுரைப்போட்டி, பொதுநலவாய மாநாடு த.பெ. இல 160, கொழும்பு என்ற முக வரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (10)





ஸ்ரீலங்கா கில்பேர்ச் நிறுவனமும் முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸாரும் இணைந்து நடத்திய கண்சிகிச்சை முகாம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நீராவிப்பிட்டி கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது... (125 - சி)

# பதிவிறக்கப் பெட்டகம்

பாடகர் பி.பி.ஸ்ரீனிவாஸ், எம்.எஸ்.சுப்புலட்சுமி வீட்டிற்கு அடிக்கடி சென்று, சிறிது நேரம் பேசிவிட்டு வருவது வழக்கம். அப்போது, எம்.எஸ்.சுப்புலட்சுமியை “குஞ்சம்மா’ என்றே அழைப்பார் பி.பி.ஸ்ரீனிவாஸ். அதுபோன்று எம்.எஸ்.சுப்புலட் சுமியும் இவரை, “சீனு’ என்று அழைப்பார். பி.பி.ஸ்ரீனிவாஸ் தன் வீட்டிற்கு வரும் பொழுதெல்லாம், அவரிடம், காலங்க ளில் அவள் வசந்தம்... என்ற பாடலைப் பாடச் சொல்லிக் கேட்பார் எம்.எஸ்.சுப்புலட்சுமி. அவரும் மெய்மறந்து பாடு வார். அதை இரசித்தபடியே எம்.எஸ்.,சும் அவருடன் சேர்ந்து பாடி மகிழ்வார். “எத்தனை அழகாய் இந்தப் பாட்டை பாடியிருக் கீங்க... இதைக் கேட்கும் பொழுது என் மனதில் மகிழ்ச்சி கூடுகிறது...’ என்று பி.பி.ஸ்ரீனிவாஸை மனதார பாராட்டு வார் எம்.எஸ்.சுப்புலட்சுமி.

**– ‘நீங்காத நினைவுகள்’ நூலில்...**

ஷபனா ஆஸ்மி, ஸ்மிதா பாட்டில் போன்ற இந்தியாவின் சிறந்த நடிகைகளை விடவும் சிறந்த நடிகை மனோரமா. அந்த இருவரிடமும் மேற்கத்திய நடிகர்களின் தாக்கம் அல் லது மேற்கத்திய மேனரிசங்கள் நிறைந்திருக்கும். திறமை வாய்ந்த இயக்குநர்கள் மூலம் தங்கள் நடிப்பை சிறப்பாக வெளிப்படுத்தியவர்கள்.

ஆனால் மனோரமா ஒரு சுயம்பு. மிக மட்டமான இயக்கு நர்களிடமும், கதாநாயகி அந்தஸ்தில் இல்லாத போதும் தனக்கு வழங்கப்பட்ட குறைந்த வாய்ப்பில் நிறைவாக செய் தவர். மொழியை அவர் பயன்படுத்திய லாவகம், அவரின் உடல் மொழி, முழுக்க முழுக்க சுயமான ஒரு தமிழ் அடையாளம்.

**– வே.மதிமாறன்**

சில்க் ஸ்மிதா தொடர்புள்ள, பத்திரிகையில் வெளியான ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒரு படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர் நுழைந்தவுடன் அனைவரும் எழுந்து மரியாதை அளிக்க சில்க் ஸ்மிதா கால் மேல் போட்டு அமர்ந்திருந்தவர், எழுந்திருக்காமல் அப்படியே அமர்ந்திருந்தாராம். பிறகு இதைக் கண்டித்த ஒரு சக நடிகையிடம், தான் அணிந்திருக்கும் உடை, தொடைப்பகுதிகளில் ஆபாசமாக இருந்ததால் படப் பிடிப்பு இல்லாத சமயத்தில் அதை மறைப்பதற்காக அப்படி அமர்ந்ததாக விளக்கமளித்திருக்கிறார். கமெராவிற்கு முன் உடைகளைக் களைந்து நடித்தாலும் கமெராவிற்குப் பின் எல்லோரையும் போல சுயமரியாதையுடன் புழங்க நினைக் கும் தனிநபர்களின் உணர்வுகள் மதிக்கப்படுவதேயில்லை. சில்க் ஸ்மிதா தற்கொலை செய்து கொண்டு இறந்த பிறகு, அவரின் நிர்வாணமான உடலை பார்க்க பலர் துடித்ததாக வும் செய்திகள் வந்தன. ஒரு தனிநபரின் அந்தரங்க வெளி அவருக்கேயானது. அதில் நுழைய எவருக்கும் உரிமை யில்லை என்கிற புரிதல் திரைப்பட இயக்குநர்களுக்கு கூட இல்லை என்பது பரிதாபமான சூழல். மேற்கத்திய உலகில் பாலுறவுத் திரைப்படங்களில் நடிக்கும் நடிக, நடிகையருக்கு இருக்கும் சுதந்திரமும் இணக்கமான சூழலும் கூட திரைப் படங்களில் நடிக்கிறவர்களுக்கு இங்கு தரப்படுவதில்லை என்பதில் நாம் எத்தகைய நாகரிகத்தில் நின்று கொண் டிருக்கிறோம் என்பதை தெளிவாக உணர வைக்கிறது.

**– சுரேஷ் கண்ணன்**

‘ஆகாத மகனாக’ தன்னை நடத்தியதாகவே கமல்ஹா சன் அவரது அப்பாவைப் பற்றிச் சொல்லும்போது தோன்றும். எல்லா மகன்களும் நன்றாகப் படிக்க, பள்ளிப் படிப்பை கூட ஒழுங்காக முடிக்காமல் சினிமா கிறுக்குப் பிடித்து அலைந்த மகனை எந்த அப்பாவுக்குத்தான் பிடிக்கும்? சிந்தனை அடிப்படையிலும் கமலும், அவரது அப்பாவும் எதிர் எதிர் துரு வங்களில்தான் இருந்திருக்கிறார்கள். நவம்பர் 5, 1991 தீபாவளி. கமலின் குணா ரிலீஸ். இரண்டு நாட்கள் கழித்து அவரது பிறந்தநாள். தமிழகமெங்கும் நற்பணிமன்றத்தினர் குஷியாக ஏற்பாடுகளை செய்திருக்கிறார்கள். இரட்டை மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டிய கமலுக்கு எதிர்பாரா துயரம். படம் தோல்வி. இரண்டு நாள் கழித்து அப்பா வேறு இறந்துவிட்டார். “நான் என்றைக்குமே என் பிறந்தநாளை சந்தோஷமா கொண்டாடவிடக் கூடாது என்று, சரியாக என் னுடைய பிறந்தநாளன்றைக்கு அவருடைய மறைவுநாளை யும் அமைத்துக்கொண்டார்” என்று அதையும் கிண்டலாக ஒருமுறை சொன்னார் கமல்.

**– யுவகிருஷ்ணா**

‘மூன்றாம் பிறை’ படத்திற்கு ஸ்ரீதேவிக்கு சிறந்த நடிகை விருது கிடைக்காமல், கமல்ஹாசனுக்கு சிறந்த நடிகர் விருது கிடைத்தது. இது சிவாஜிக்கு சிறந்த நடிகர் விருது தராமல், ரிக்ஷாக்காரன் திரைப்படத்தில் ‘சிறப்பாக நடித்ததற் காக’ எம்.ஜி.ஆருக்கு தேசிய விருது தந்தது போன்ற தமாசு.

**– வே.மதிமாறன்**

# மண்டைதீவு பிரதான வீதியை ஊடறுத்துப்பாயும் கடல்நீர்

## பெரும் சிரமத்தில் மக்கள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்திற்கான பிரதான வீதியை ஊடறுத்து கடல் நீர் நேற்றுமுதல் பாய்வதால அந்தப்பாதையூடாக பயணம் செய்யும் வாகனங்கள் பயணிகள் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

மண்டைதீவுக்கான பிரதான வீதி ஊர்காவற்றுறை பண்ணை வீதியில் இருந்து மண்டைதீவிற்கு பிரிந்து செல்லும் வீதியில் இருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் வரையான இந்த வீதி கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாக பாரிய சேதங்களுக் குள்ளாகிக் காணப்படுகின்றது.

அத்துடன் இந்த வீதியின் இருமருங்கிலும் கடல் சூழ்ந்திருக்கும் பகுதிகளில் உள்ள பாலங்கள், மதகுகள் என்பன இடித்து கடலில வீழ்ந்தும் மோசமாக சேதங்களுக் குள்ளாகிக் காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்த வீதிப் பகுதியின் குறுக்காக ஊடறுத்து கடல் நீர் பாய்ந்து வருகின்றது.

இதன் காரணமாக சேதங்களுக் குள்ளாகிய இந்த வீதி அரிப்பிற் குள்ளாகி மேலும் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதியூடாக பயணிகள் போக்குவரத்து வரும் மழைநாட்களில் கேள்விக்குறியாக மாறும் நிலை தோன்றியுள்ளது. (பா)

## பொங்கல் நிகழ்வு

கோப்பாய் கண்ணகை அம்மன் கோவில் சனசமூக நிலையமும் கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து இறை ஆசி வேண்டி நடாத்தப்படும் வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று மாலை 3.00 மணியளவில் கோப்பாய் ஞானவைரவா ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் கண்ணகை அம்மன் கோவில் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வுகளில் இறையாசிகளை வேண்டி கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(48)

# நலன்புரி நிலைய மக்களின் துயர்தீர்க்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.வலி.வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் நலன்புரி நிலையங்களை நேற்றுமுன்தினம் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலா்ன உயர்மட்டக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழமாவட்டத்தின் வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களான உடுவில் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், தெல்லிப்பளை கோணாற்புலம் மற்றும் கோப்பாய் கிருஸ்ணன் நலன்புரி நிலையம் ஆகியவற்றிற்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மற்றும் பிரதேச செயலர்கள் உள்ளடங்கிய உயர்மட்டக் குழுவினர் முகாம்களின் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை, அம்மக்களை மீளக்குடியமர்த்தப்படவுள்ள தகவலையும் தெரிவித்தனர். மேலும் குறித்த நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு விசேட ஏற்பாட்டின் அடிப்படையில் உலருணவு நிவாரணங்களை வழங்குதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

இதன்போது அம்மக்களுடன் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஒரு சீரான நேர்த்தியான நுட்பமான அரசியல் அணுகுமுறைக்கூடாகவே எமது நிலப்பரப்புக்களை நாம் விடுவித்து வருகின்றோம். இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தின் 24 கிராம சேவகர் பிரிவுகளில் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அதேபோன்று தற்போது பலாலி கிழக்கு, பலாலி வடக்கு கீரிமலையில் ஒருபகுதி மற்றும் வளலாய் ஆகிய பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இதேபோன்று எஞ்சியிருக்கும் மிகக்குறுகிய நிலப்பரப்புக்களும் விரைவாக மீட்கப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மஞ்சள் கோட்டுக்கடவையை பயன்படுத்தாததால் விபத்து

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடம் சந்திக்கும் இராமநாதன் மகளிர் பாடசாலை பிரதான நுழைவாயிலுக்கும் இடையிலான இருநூறு மீற்றர் தூரத்திற்குள் இரண்டு இடங்களில் மஞ்சள் கோட்டுக் கடவைகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதனை சரிவரப் பயன்படுத்தாததால் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

மாணவர்கள், மற்றும் பொது மக்கள் மஞ்சள் கோட்டு கடவை தவிர்ந்த ஏனைய பகுதிகளால் வீதியைக் கடப்பதால் தினமும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து வீதிக் கடவை பற்றிய அறிவை சகலருக்கும் தெரிவிப்பதன் மூலம் விபத்துக்களைக் குறைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (66)

# புனரமைக்கப்படாத சேனாதிராஜ முதலியார் வீதி

(அச்சுவேலி)

அச்சுவேலி தம்பாலை சேனாதிராஜ முதலியார் வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

மேலும் மழைக்காலங்களில் இந்த வீதியால் போக்குவரத்துக்களை மேற்கொள்ள முடியாத நிலைகாணப்படுவதுடன் வீதி முழுவதும் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புக்கள் இருப்பதுடன் நோய் பரவும் அபாய நிலையும் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த வீதியால் பயணம் செய்யும் துவிச்சக்கர வண்டிப் பயணிகள் மற்றும் பாதசாரிகள் சிரமங்களை எதிர் கொள்வதுடன் விபத்துக்களையும் தாம் சந்திக்க நேரிடுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்த வீதியின் நிலைதொடர்பாக ஏற்கனவே பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் உரிய தரப்பினர் இதில் கவனம் செலுத்தவில்லை என சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (85)

# பொதுநலவாய மாநாடு

CHOGM 2013

Sri Lanka

பொது நலவாய அமைப்பு என்பது பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளின் தொகுதியாகும். இதன் தலைமைச் செயலகம் லண்டன் நகரில் உள்ளது. பொது நலவாய நாடுகளின் தலைவியாக இரண்டாம் எலிசபெத் மகாரணி உள்ளார். இதன் செயலாளராக கமலேஷ் சர்மா செயற்படுகிறார்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் இரண்டாம் திங்கட்கிழமை பொதுநலவாய தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. நவம்பர் மாதம் 11ஆம் திகதி பொதுநலவாய நாடு களின் நினைவுறுத்தல் நாளாகும்.

1926ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட பால்பர் உடன்படிக்கை 1931ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் திகதி உருவாக்கப்பட்ட வெஸ்ட் மின்ஸ்டர் சாசனம் ஆகியவற்றின் படி 1949ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி லண்டன் பிரகடனம் மூலம் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

மனித உரிமைகளை பாதுகாத்தல், தனிமனித உரிமையை பாதுகாத்தல், மனித சமூக சமத்துவம் பேணல், ஜனநாயகத்திற்கு வலுவூட்டல், நல்லாட்சி தருதல், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல், தாராள வர்த்தகம் நடத்தல், உலக சமாதானத்தை நிலை நிறுத்தல் என்பன இவ் அமைப்பின் குறிக்கோள்களாகும்.

தேசத்தின் பருமன், சனத் தொகை, பொருளாதார அந்தஸ்து போன்றன கருத்தில் கொள்ளப்படாமல் சமத்துவமான குரல், அந்தஸ்து என்பன இவ் அமைப்பில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் உண்டு.

இவ் அமைப்பில் இறுதியாக இணைந்த நாடு ருவாண்டா ஆண்டு 2009. 2009 ஆம் ஆண்டு, செப்ரெம்பர் முதலாம் திகதி பிஜி நாட்டின் பொதுநலவாய உறுப்புரிமை இடைநிறுத்தம் செய்யப்பட்டது. தற்போது இவ் அமைப்பில் 53 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இது வரை இடம்பெற்ற மாநாடுகளில் முதலாவது மாநாடு தவிர்ந்த ஏனைய மாநாடுகள் அனைத்திலும் பொதுநலவாய நாடுகளின் தலைவி எலிசபெத் மகாராணி கலந்து கொண்டார்.

எலிசபெத் மகாராணியின் உடல் நிலை காரணமாக இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. எனவே இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்கிறார். இதுவரை நடைபெற்ற மாநாடுகளில் முதலாவது தவிர மகாராணி கலந்து கொள்ளாத மாநாடு இலங்கையில் நடக்கும் மாநாடாகும்.

முதலாவது பொதுநலவாய உச்சி மாநாடு 1971ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்றது. பொதுநலவாய அமைப்பில் இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததுடன் இணைந்து கொண்டது. 2009ஆம் ஆண்டு டிரினிடாட் மற்றும் டொபாக்கோ ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாட்டிலேயே 2013ஆம் ஆண்டு மாநாடு இலங்கையில் நடாத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளின் சர்வதேச மாநாடு நடந்ததன் பின் இலங்கையில் நடக்கும் சர்வதேச மாநாடு இதுவாகும். இம் மாநாடு பொதுநலவாய இளைஞர் மாநாடு, மக்கள் மன்றம், வர்த்தக மாநாடு, பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு என நான்கு பிரிவுகளாக நடைபெறுகிறது.

பொதுநலவாய உச்சி மாநாடு இளைஞர் மாநாட்டுடன் நவம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 17ஆம் திகதி பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுடன் முடிவடையும். இம் மாநாட்டுக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்குவதுடன் 2015 இல் பிரித்தானியாவில் மாநாடு நடைபெறும் வரை நடப்புத் தலைவராக அவரே செயற்படுவார்.

பொதுநலவாய உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறுவது இலங்கையர் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டிய விடயம் ஆகும்.

ஜெ. சிந்து

க.பொ.த.(சாதாரணதர)
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
கல்வி முரசு
Grade - 11
வர்த்தகமும் கணக்கீடும்
ஆசிரியர் : S.மயூரன்

## 01) கணக்கீட்டு அறிமுகமும் கணக்கீட்டுச் சமன்பாடும்

1) கணக்கீடு என்றால் என்ன? கணக்கீட்டின் பிரதான தொழிற்பாடுகளைத் தருக?
2) கணக்கீட்டுச் சமன்பாடு அல்லது ஐந்தொகை சமன்பாடு என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
3) அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டினைத் தருக?
4) சொத்துப் பொறுப்புக்களின் வகுதிகளுக்கு ஏற்ப அடிப்படை கணக்கீட்டுச் சமன்பாட்டினை விரித்து எழுதுக.
5) வருமானங்களும் செலவுகளும் சேர்க்கப்படும்போது புதிய கணக்கீட்டுச் சமன்பாட்டினைத் தருக.

6) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் "சநலைய" நிறுவனத்தில் இருந்து பெறப்பட்டதாகும். கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இரட்டை விளைவுகளை தரப்பட்டுள்ள சமன்பாட்டில் எழுத்துரைக்க.
1) மூலதானமாக ரூ.100,000 இட்டு முயற்சி ஒன்றை ஆரம்பித்தார்.
2) வங்கியில் ரூபா 50,000 இட்டு வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பித்தார்.
3) வாடகை செலுத்தியது ரூபா 4,000
4) காசுக் கொள்வனவு ரூபா 4,000
5) தளபாடக் கொள்வனவு ரூபா 5,000
6) பெற்ற வட்டி ரூபா 4,000
7) உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக பற்றியது ரூபா 500
8) தீபனிடம் கடனுக்கு கொள்வனவு ரூபா 10,000
9) காசுக்கு விற்பனை ரூபா 3,000
10) கடன் கொடுநருக்கு கொடுத்த காசு ரூபா 2,000
11) கடனுக்கு விற்பனைகள் ரூபா 4,000
12) காசுக்கு கொள்வனவுகள் ரூபா 1,000

* மூலதனம் + பொறுப்புக்கள் + வருமானம் = சொத்துக்கள் + செலவுகள்

## 2) முதன்மை ஏடுகளும் இரட்டை பதிவும் (Primary Books & Double Entry System)

1) முதன்மை ஏடுகள் என்றால் என்ன?
2) நிறுவனத்தில் பொதுவாக பயன்படுத்தப்படும் முதன்மை ஏடுகள் யாவை? முதன்மை ஏட்டில் பதிவதற்கான மூல ஆவணங்களையும் தருக.
3) நாளேடுகள் என்றால் என்ன? நிறுவனங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நாளேடுகள் எவை?.
4) குறிப்பேடு என்றால் என்ன? குறிப்பேட்டில் பதியப்படும் விடயங்கள் யாவை?
5) கணக்குகள் என்றால் என்ன? கணக்குகளில் பொதுவான வகுதிகள் யாவை? உதாரணம் தருக.
6) கணக்குகளில் பதிவுகளை மேற்கொள்ளும் முறைகளை எளிய கணக்கொன்றின் மாதிரி வடிவத்துடன் விளக்குக.
7) பேரேடு என்பதைச் சுருக்கமாக விளக்குக? பேரேட்டின் பொதுவான வகுதிகள் யாவை?
8) பின்வரும் நடவடிக்கைகளுக்கு இரட்டைப் பதிவுகளைத் (விளைவுகளை) தருக.

## 3 வங்கி இணக்க கூற்று (Bank Reconciliation Statement)

1) வங்கியில் நடைமுறைக் (Current Account) கணக்கு ஒன்றினைப் பேணுவதால் வாடிக்கையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் யாவை?

2) நடைமுறைக் கணக்கு ஒன்றில் வைப்பில் இடக்கூடிய சட்ட இறுமதிப் பணம் தவிர்ந்த ஏனைய பண வகைகளைத் தருக?

3) வங்கிக்கூற்று (Bank Statement) என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

4) அ) வங்கி இணக்க கூற்று (Bank Reconciliation Statement) அல்லது வங்கிக் கணக்கிணக்க கூற்று என்பதை சுருக்கமாக விளக்குக.

ஆ) வங்கி இணக்க கூற்றினை தயாரிப்பதால் நிறைவேற்றப்படும் நோக்கங்கள் யாவை?

5) காசேட்டு வங்கி நிரல் மீதியும் (காசேட்டு வங்கி மீதி) வங்கிக் கூற்றின்படி வங்கி மீதியும் (வங்கி கூற்று மீதி) வேறுபடுவதற்கான காரணங்கள் யாவை?

6) வங்கி இணக்க கூற்றினைத் தயாரிக்கும் பொதுவான முறைகள் யாவை?
1) காசேட்டினை சீராக்கி சீராக்கிய காசேட்டு மீதியில் இருந்து வங்கி இணக்க கூற்றினைத் தயாரித்தல்.
2) காசேட்டு மீதியில் இருந்து தயாரித்தல்.
3) வங்கி கூற்று மீதியில் இருந்து தயாரித்தல்.

7) காசேட்டு வங்கி நிரலின் செலவு பக்கத்தில் மீதி கீழ் கொண்டு வந்த தொகை எதனைக் குறிக்கும்.

8) "ரிஹானா" வின் 31.01.1999 முடிவுற்ற மாதத்திற்கான காசேட்டு வங்கி நிரல் வருமாறு

| திகதி | விபரம் | வங்கி | திகதி | விபரம் | வங்கி |
|---|---|---|---|---|---|
| 99.01.01 | மீதி | 10,000 | 99.01.04 | நிரோஷா R - 012 | 2,000 |
| 99.01.05 | காசு | 4,000 | 99.01.05 | விளம்பரம் R - 013 | 500 |
| 99.01.08 | காசோலை X - 01 | 2,000 | 99.01.14 | சம்பளம் R - 014 | 4,500 |
| 99.01.10 | காசோலை X -12 | 1,000 | 99.01.18 | ரம்சியா R - 015 | 2,200 |
| 99.01.15 | ரிப்தா காசோலை-201 | 4,000 | 99.01.25 | வாடகை R - 016 | 2,300 |
| | | | | மீ/கொ/செ | 9,500 |
| | | 21,000 | | | 21,000 |

"ரிஹானா" வின் 31.01.1999 வங்கிக் கூற்று

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 99.01.01 | மீதி.கொ.வ | | | 10,000 |
| 99.01.05 | காசு | | 4,000 | 14,000 |
| 99.01.06 | காசோலை R- 012 | 2,000 | | 12,000 |
| 99.01.07 | காசோலை R - 013 | 500 | | 11,500 |
| 99.01.10 | காசோலை X - 01 | | 2,000 | 13,500 |
| 99.01.15 | காசோலை X - 12 | | 1,000 | 14,500 |
| 99.01.20 | சஸ்மினா | | 1,500 | 16,000 |
| 99.01.25 | பங்கு இலாபம் | | 3,000 | 19,000 |
| 99.01.26 | காசோலை R - 014 | 4,500 | | 14,500 |
| 99.01.27 | காசோலைப் புத்தகக் கட்டணம் | 300 | | 14,200 |
| 99.01.28 | வங்கிக் கட்டணம் | 200 | | 14,000 |
| 99.01.30 | காப்புறுதி | 2,000 | | 12,000 |
| 99.01.31 | மின்சாரம் | 1,000 | | 11,000 |

வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 201 இல. ரூபா 4000/= காசோலை வங்கியால் மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது.

* நீர் காசேட்டினை சீராக்கி "ரிஹானா" வின் ஜனவரி மாதத்திற்கான வங்கி கூற்றினைத் தயாரிக்க.

## 4) முடிவுக் கணக்குகள் (Final Accounts)

1) வியாபார நிறுவனங்களில் தயாரிக்கப்படும் பொதுவான முடிவுக் கணக்குகள் யாவை?
2) வியாபார கணக்கு என்றால் என்ன? வியாபாரக் கணக்கினைத் தயாரிப்பதன் பொதுவான நோக்கங்கள் யாவை?
3) இலாப நட்டக் கணக்கு என்பதை சுருக்கமாக விளக்குக? இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுவதன் பொதுவான நோக்கங்கள் யாவை?
4) ஐந்தொகை என்பதைச் சுருக்கமாக விளக்குக?

5) "ஐஸ்வர்யா" நிறுவனத்தில் 31.12.1998 இல் முடிவுற்ற பிரித்தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு,

| | | |
|---|---|---|
| காணி கட்டிடம் | 1,50,000 | |
| தளபாட உபகரணங்கள் | 50,000 | |
| கொள்வனவுகளும், விற்பனைகளும் | 2,00,000 | 3,00,000 |
| விற்பனைத் திரும்பல், கொள்வனவுத் திரும்பல் | 15,000 | 5,000 |
| பொறி இயந்திரங்கள் | 30,000 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் : தளபாடம் | | 20,000 |
| மோட்டார் | | 10,000 |
| உள்முகக்காவுகை | 5,000 | |
| வெளிச்சென்ற வண்டிக் கூலி | 5,000 | |
| கப்பல் கேள்வும் சுங்கக் கட்டணம் | 2,000 | |
| 10% முதலீடுகள் 1.7.98 | 50,000 | |
| காப்புறுதிகள் | 3,000 | |
| மின்சாரம் | 4,500 | |
| விளம்பரம் | 2,000 | |
| பொதி செய்தற் பொருட்கள் | 3,000 | |
| பெற்ற வாடகை | | 5,000 |
| வங்கிக் கட்டணம் | 500 | |
| எழுதுகருவிகள் | 1,200 | |
| எடுப்பனவுகள் | 800 | |
| பெற்ற முதலீட்டு வருமானம் | | 2,000 |
| சம்பளம் | 10,000 | |
| 5% கடன் | | 30,000 |
| தொக்கு 1.1.98 | 30,000 | |
| வினியோக வான் | 40,000 | |
| வருமதியாளர்கள், சென்மதியாளர்கள் | 30,000 | 25,000 |
| அ.மு.கடன் | 3,000 | |
| அ.மு.கடன் ஏற்பாடு | | 1,400 |
| மூலதனம் | | 177,600 |
| சம்பள முற்பணம் 1.1.98 | 1,000 | |
| | 6,26,000 | 6,26,000 |

**கீழே தரப்பட்டுள்ள தகவல்களையும் கருத்திற்கொண்டு 31.12.1998 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் கணக்கினைத் தயாரிக்க**

1) 31.12.1998 இல் இருப்புக்களின் கிரயம் 12,000
2) பின்வரும் செலவுகள் நிலுவையாகவுள்ளன. மின்சாரம் ரூபா 500, விளம்பரம் ரூபா 1000.
3) காலவதியாகாத காப்புறுதி ரூபா 500, எழுது கருவிகள் 200 ரூபா.

**4) உற்பத்திக் கணக்கு (Manufacturing Accounts)**

1) உற்பத்திக் கணக்கு அல்லது படிம்படிச் செய்கை கணக்கு என்றால் என்ன?

2) உற்பத்திக் கணக்கினைத் தயாரிப்பதன் பொதுவான நோக்கங்கள் யாவை?

3) உற்பத்திக் கிரயம் என்பதில் நீர் விளங்கிக்கொள்வது யாது?

4) உற்பத்திக் கிரயத்தினைப் பொதுவாக எவ்வாறு வகைப்படுத்தலாம் என சுருக்கமாக விளக்குக?

5) DILANEE உற்பத்தி நிறுவனத்தில் இருந்து 31.12.1998 இல் பெறப்பட்ட தகவல்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| மூலப்பொருள் இருப்பு 1.1.98 ல் | 1,20,00 | தொ.சாலை மின்சாரம் | 9,000 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 80,000 | தொ.சாலை ஊழியர் சம்பளம் | 12,000 |
| உட்சுமை கூலிகள் | 10,000 | வலு சக்தி | 4,000 |
| மூலப்பொருள் வெளித்திருப்பம் | 5,000 | தொழிற்சாலை இயந்திரங்கள் | 5,00,000 |
| கப்பல் கேள்வும் சுங்க கட்டணம் | 4,000 | தொ.சா. காப்புறுதி | 5,000 |
| இறக்குமதி வரி | 1,000 | நேர்கூலிகள் | 12,000 |
| தொழிற்சாலை வாடகை | 6,000 | நேரில் பொருட்கள் | 2,000 |

**பின்வரும் தகவல்களும் உமக்கு தரப்படுகின்றன.**

1) இறுதி இருப்புக்கள் மூலப்பொருட்கள் 8,000
2) தொ.சாலை வாடகையில் 4000 நிலுவையாகவுள்ளது. முற்பணக் காப்புறுதி ரூபா 1000 ஆகும்.

**தயாரிக்க :-**

1) Dilanee யின் 31.12.1998 ஆண்டிற்கான உற்பத்திக் கணக்கினை தயாரிக்க.
2) முதற்கிரயத்தைக் கணிக்க.
3) குறித்த ஆண்டில் உற்பத்திச் செய்யப்பட்ட அலகுகள் 2000 ஆயின் ஓர் அலகிற்கான உற்பத்தி கிரயத்தைக் காண்க..

**6) இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் கணக்குகள் (கொள்ளல் கொடுத்தல் கணக்கு & வருமானச் செலவுக் கணக்கு)**

1) இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் (Nonprofit Organization) என்பதை சுருக்கமாக விளக்குக. (உ-ம் ) தருக.

2) இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் பொதுவாக தயாரிக்கப்படும் இரு கணக்குகளும் யாவை? சுருக்கமாக தருக?

3) கொள்ளல், கொடுத்தல் கணக்கிற்கும் காசு கணக்கிற்கும் இடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகளைத் தருக.

4) வருமானச் செலவுக் கணக்கு இலாப நட்டக் கணக்கு என்பவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளைத் தருக.

5) வருமானச் செலவு கணக்கிற்கும் கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?

6) இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் யாவை?

7) இலாப நோக்கமுள்ள நிறுவனங்களின் மூலதன கணக்கிற்கு சமமாக இலாப நோக்கமற்ற நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் கணக்கு யாது?

*1995 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கு டில்மினி விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல் கொடுத்தல் கணக்கு பின்வருமாறு*

**கொள்ளல் கொடுத்தல் கணக்கு**

| பெறுவனவுகள் | ரூபா | கொடுப்பனவுகள் | ரூபா |
|---|---|---|---|
| ஜனவரி 1 ல் மீதி மு/கொ | 12.000 | எழுது கருவி வகை | 800 |
| சந்தாப் பணத்தொகைகள் | | அஞ்சற் செலவு | 1,600 |
| 1994 1000 | | கொடிதினச் செலவுகள் | 3,200 |
| 1995 15,000 | | செய்தித்தாள்கள் | 450 |
| 1996 1500 | 17,500 | உபசரணைச் செலவுகள் | 1,600 |
| நன்கொடைகள் - கட்டம் | 10,000 | பார்வையாளர் அரங்கினைப் பேணுதல். | 5,100 |
| நன்கொடைகள் - பொது | 4,000 | தளபாடமும் சாதனங்களும் | 1,200 |
| கொடி தின வருமானம் | 6,200 | விளையாட்டு உபகரணங்கள் | 5,000 |
| நுழைவுக் கட்டணம் | 16,000 | மீதி கி/கொ/ டிசெம்பர் 31 | 48,750 |
| பழையவிளையாட்டு உபகரண விற்பனை | 1,000 | | |
| | 66,700 | | 66,700 |

**பின்வருவனவற்றை கருத்திற் 1995 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான செலவுக்கணக்கினைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.**

1) 1995 ஆம் ஆண்டிற்கான சந்தாப்பண நிலுவை ரூபா 2400 ஆகும். 1995 ஆம் ஆண்டிற்கு 1994 இல் கிடைக்கப்பெற்ற சந்தாப் பணம் ரூபா 250 96 ஆம் ஆண்டிற்கு பெற்ற முற்பணச் சந்தா ரூபா 1500.

2) ஆண்டின் தொடக்கத்தில் விளையாட்டு உபகரணங்கள் ரூபா 3000 ஆகப் பெறுமானமிடப்பட்டன.
ஆண்டின் இறுதியில் விளையாட்டு உபகரணங்கள் ரூபா 7000 ஆகப் பெறுமானமிடப்பட்டன.

3) உபசரணைச் செலவுகள் ரூபா 400 நிலுவையாக உள்ளது.

4) பயன்படுத்தப்படாத எழுது கருவிகள் 250 ரூபா.

**பின்வருவனவற்றைத் தயாரிக்க**

1) a) வருமானச் செலவுக் கணக்கு
b) 1.1.95 இல் திரண்ட நிதியம்

7)
1) கணக்கீட்டு பதிவுகளின்போது ஏற்படக்கூடிய வழுக்களுக்கு 4 உதாரணம் தருக?

2) பரீட்சை மீதியை அடிப்படையாகக் கொண்டு வழுக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்.

3) "மாதவனின்" ஜனவரி மாதத்திற்கான பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. வித்தியாசத்திற்கான காரணங்கள் வருமாறு

1) விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 200 ஆல் குறைத்துக் காட்டப்பட்டது.
2) கொடுத்த காசு 1000 ரூபாய் பெற்று கழிவுக்கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3) காப்புறுதி மீதி 1000 ரூபாய் பரீட்சை மீதிக்கு மற்றும் விடுபட்டிருந்தது.
4) ஜோதிகாவிற்கு கொடுத்த ரூபா 1500 காசேட்டில் ரூபா 5100 பணம் அவரின் கணக்கில் 5000 ரூபா எனவும் பதிவுசெய்யப்பட்டது.
5) கடன் கொள்வனவுகள் ரூபா 5000 கடன்பட்டோர் கணக்கில் மட்டும் பதிவுசெய்யப்பட்டது.
6) தளபாடக் கொள்வனவுக்கு 3000 ரூபா கொள்வனவு கணக்கில் பதியப்பட்டது.

**தயாரிக்க**
1) பிழைகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு
2) தொங்கல் கணக்கு

8)
1) செய்கைத் தாள் (work Sheet) என்றால் என்ன?

2) Work Sheet ஐத் தயாரிப்பதன் பொதுவான இரு நோக்கங்களைத் தருக?

3) Work Sheet இல் உள்ளடக்க வேண்டிய பிரதான நிரல்கள் 4 தருக?

4) "மயூரன்" நிறுவனத்தில் 31.12.2000 இல் முடிவுற்ற ஆண்டின் பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனைகள் | | 100.000 |
| கொள்வனவுகள் | 40,000 | |
| இருப்பு 1.1.2000 | 5,000 | |
| கடன்படுனர், கடன்கொடுனர் | 10,000 | 15,000 |
| காணிகட்டிடம் | 100,000 | |
| வாடகை | 3,000 | |
| மோட்டார் | 5,000 | |
| காப்புறுதி | 2,000 | |
| விளம்பரம் | 3,000 | |
| சம்பளம் | 5,000 | |
| எழுதுகருவி | 1,500 | |
| மின்சாரம் | 2,500 | |
| வங்கிக்கட்டணம் | 500 | |
| வெளிச்சென்ற கூலி | 1,000 | |
| சுங்கத் தீர்வைகள் | 2,000 | |
| உட்திருப்பம், வெளித்திருப்பம் | 3,000 | 2,000 |
| வங்கி மீதி | 10,000 | |
| காசு மீதி - | 5,000 | |
| மூலதனம் | | 1,26,500 |
| | 2,43,500 | 2,43,500 |

1) 31.12.2000 இல் இறுதி இருப்புக்கள் 10,000
2) சென்மதி மின்சாரம் 1,000
3) முற்பண வாடகை 1,500
4) கடன்படுநரின் 1000/= அறவிடமுடியாக் கடனாகப் பதிவு செய்க.
5) மோட்டார் வாகனத்துக்கு 10% பெறுமானத் தேய்வு இடுக.

தயாரிக்க:
பொருத்தமான நிரல்களுடன் வேலைத்தாள் (Work Sheet)

# சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பாடசாலைகளில் முறைப்பாட்டுப் பெட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 17 பாடசாலைகளில் முறைப்பாட்டுப் பெட்டிகள் கடந்த சனிக்கிழமை வைக்கப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.


யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோகங்களும் குற்றச் செயல்களும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், மாணவர்கள் தங்களுடைய பிரச்சினைகள் மற்றும் அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்துவதற்கு மேற்படி முறைப்பாட்டுப் பெட்டிகள் அவர்களுக்கு உதவியாக விருக்கும் எனவும் அவர் கூறினார்.

மேற்படி முறைப்பாட்டுப் பெட்டிகளில் இடப்படும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். (48)

## 48 பில்லியன் வருமானம்

சிலோன் டொபாக்கோ கம்பனியிடமிருந்து அரசாங்கத்துக்கு 48.5 பில்லியன் ரூபா வருமானம் நடப்பு ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கை புகையிலை கம்பனியிடமிருந்து (சிலோன் டொபாக்கோ கம்பனி) 48.5 பில்லியன் ரூபா இலங்கை அரசாங்கத்துக்கு வருமானமாகக் கிடைத்துள்ளதாக கம்பனி அறிவித்துள்ளது. இந்தப் பெறுமதி கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 700 மில்லியன் ரூபா அதிகம் என கம்பனி அறிவித்துள்ளது.

# இரத்ததானமுகாம்



யாழின் கரங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து இரத்ததான முகாமொன்று நேற்றுமுன்தினம் யாழ்.இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாதச் சமரில் வெற்றிவாகை

தமிழ் மாமன்றம் நடாத்திய ‘வன்னியின் வாதச்சமர் 2013’ நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஐயாத்துரை அரங்கில் ஆரம்பமாகியது.

தகுதி காண் சுற்றிலே புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்த 8 அணிகள் காலிறுதிச் சுற்றிலே மோதின.

அரையிறுதிப் போட்டியில் வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயமும் மோதியதுடன், வ/விபுலானந்த கல்லூரியுடன் வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி போட்டியிட்டது.

இவ்விரு அணிகளும் அரையிறுதிகளிலும் வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் வ/விபுலானந்த கல்லூரியும் முன்னேறின.

சவால் மிகு இறுதிப் போட்டியிலே வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் வெற்றி வாகை சூடியது. மேலும் சிறந்த விவாதியாக வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய போட்டியாளர் மயூரதன் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றி பெற்ற அணிகளுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் மற்றும பரிசில்கள் என்பன தமிழ் மாமன்றத்தின் பிரம்மாண்டமான கலைவிழாவிலே வழங்கப்படவுள்ளது.

# இளைஞர் கழகங்கள் புனரமைப்பு



சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

2014/2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் இதன் மூலம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு அங்கமாக பெரியவிளான் இளைஞர் கழகத்தின் புனரமைப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச இளைஞர்கழக சம்மேளனத் தலைவர், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர், இளைஞர் சேவை அதிகாரி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (48)

# தென்மராட்சியில் பாரதி விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுத்த பாரதி விழா நேற்று முன்தினம் காலை மாலை அமர்வுகளாக சாவகசசேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

காலையில் பாரதி தரிசனம் என்ற பொருளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் கருத்தரங்கமும் மாலை இன்றைய இளையோர் மொழி நாட்டம்பெற வழிகாட்டவல்ல பெரும்புலவன் வள்ளுவரா? கம்பரா? பாரதியா? என்ற பொருளில் இ.ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றமும் இடம்பெற்றன.

காலை அமர்வுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் ந.பாலச்சந்திரனும் மாலை அமர்வுக்கு அதிபர் அ.கைலாயபிள்ளையும் தலைமைதாங்கினர்.

தென்மராட்சிக்குப் புகழ் சேர்த்தவர்கள் வரிசையில் சோதிட வல்லுநர் சிவ ஸ்ரீ சி.சிதமபரநாதக் குருக்கள் கௌரவிக்கப்பட்டார்.

# வெள்ளத்தில் மூழ்கியுள்ள அதிசய விநாயகர் வீதி



மழை காரணமாக மல்லாவி அதிசய விநாயகர் வீதி வெளளத்தில் மூழ்கியுள்ளது.

மல்லாவி சந்தையின் முன் இருக்கும் அதிசய விநாயகர் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது இதனூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

மல்லாவி பிரதான வீதி காப்பெற வீதியாக புனரமைக்கப்பட்ட போதும் வாய்க்கால்கள் அமைக்கப்படாமையால் மழை வெள்ளம் வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்து வருகிறது. (140)






# மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அறிவிக்கலாம்

யாழ்.மாவட்டத்தில் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் விவசாயம், நீர்ப்பாசனம், நீர்வழங்கல், மீள்குடியேற்றம், வீடமைப்பு, மின்சாரம், உள்ளூராட்சி, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், மீன்பிடி, வாழ்வாதாரம் ஆகிய துறைரீதியான பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் ஆகியவற்றினை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ இணைப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், கலைவிழாவும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இளைப்பாறிய பிரதி அதிபர் திருமதி.இந்திராணி ஸ்ரீரங்கன் மங்கள விளக்கேற்றுவதையும், மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் கலைநிகழ்வையும் காணலாம். (01)

# தெருக்களில் சிதறிக் கிடக்கும் பிணங்கள்

# உணவுக்காக அலையும் மக்கள்

## பிலிப்பைன்ஸில் புயலின் கொடூரம்



புயலால் பிலிப்பைன்ஸ் தெருக்களில் பிணங்கள் சிதறிக்கிடக்கின்றன. உணவைத் தேடி பொதுமக்கள் அலைந்து திரிந்து வருகின்றனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள சமர், லிஸ்தே தீவுகளை "ஹையான்" புயல் தாக்கியது. அப்போது மணிக்கு 313 முதல் 378 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசியது. கடலில் 20 அடி உயரத்துக்கு இராட்சத அலைகள் எழுந்தன.

புயல் கரையை கடந்து சென்ற வழியில் 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் முழுமையாக அழிந்துவிட்டன.

புயல் தாக்குதலில் லிஸ்தே மாகாண தலைநகர் தக்லோபான் நகரம் பலத்த சேதத்துக்குள்ளாகி தரை மட்டமாகி விட்டது. சூறாவளி காற்றில் வீடுகள் அனைத்தும் நொருங்கின. ஒரு சில கட்டடங்களே உள்ளன.


ஹையான் புயல் தாக்குதலுக்கு 10 ஆயிரம் பேருக்கு மேல் பலியாகி உள்ளனர். அவர்களின் பிணங்கள் தெருக்களில் சிதறிக் கிடக்கின்றன. கடல் அலை ஊருக்குள் புகுந்ததாலும், மழை வெள்ளம் பெருக்கெடுத்ததாலும் அதில் சிக்கி பலர் இறந்தனர். அவர்களின் உடல்கள் தண்ணீரில் மிதக்கின்றன.

அவற்றை அப்புறப்படுத்தும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர். பிணங்கள் வீதியோரங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. சில இடங்களுக்கு மீட்பு படையினர் செல்ல முடியாததால் பிணங்கள் அப்புறப்படுத்த முடியாமல் அழுகி துர்நாற்றம் வீசுகின்றது.

புயல் தாக்குதலில் பிலிப்பைன்ஸ்சின் 36 மாகாணங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. சுமார் 50 இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். உறவினர்களையும் இழந்துள்ளனர்.

இவர்களை தேடி தெருக்களில் அலைந்து திரிகின்றனர். எங்கு பார்த்தாலும் அழுகுரலும், சோகமும் எதிரொலிக்கிறது. உயிர் பிழைத்தோர் சாப்பிட உணவும், குடிக்க தண்ணீரும் இன்றி பரிதவிக்கின்றனர். அவற்றை பெற தக்லோன் விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ள முகாமில் நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றனர்.

## நான் மலாலா புத்தகத்திக்கு தடை




பெண் கல்விக்காக போராடி வரும் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த சிறுமி மலாலா சமீபத்தில் எழுதிய "நான் மலாலா" புத்தகத்தை அந்நாட்டு தனியார் பாடசாலைகளில் அனுமதிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் அனைத்து தனியார் பாடசாலைகள் கூட்டமைப்பு தலைவர் மிர்ஸா காஸிப் அலி வெளியிட்ட அறிக்கை

"ஐ எம் மலாலா" என்ற அந்தப் புத்தகத்தில் பல சர்ச்சைக்குள்ளான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாகவும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

# நெதர்லாந்து அரசர், ராணி மீது தக்காளி வீச்சு



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு நெதர்லாந்து நாட்டின் அரசர் வில்லியம் அலெக்சாண்டரும், ராணி மேக்சி மாவும் வருகை தந்திருந்தனர்.

அப்போது ரஷ்யாவில் எதிர்கட்சியாக விளங்கும் தேசிய போல்ஷெவிக் கட்சியின் செயல் தொண்டர்கள் இருவர் அவர்கள் மீது தக்காளிகளை வீசியுள்ளனர்.

ரஷ்யாவின் மாநில பாதுகாப்பு அதிகாரிகள் அவர்கள் வீசிய குறி தவறாக விழுந்தது என்று குறிப்பிட்டனர்.

இந்தக் கட்சி ரஷ்யாவில் தடை செய்யப்பட்டுள்ள ஒன்றாகும். இதன் தலைவர் எடோர்ட் லிமொனோவ் இன்று இந்த எதிர்ப்பு குறித்த விளக்கத்தினை அளித்தார்.

நெதர்லாந்து நாட்டின் அயல்நாட்டவர்களை வெளியேற்றும் மையம் ஒன்றில் இருந்த போல்ஷெவிக் கட்சியின் உறுப்பினரான அலெக்சாண்டர் டல்மடோவ் என்பவர் கடந்த ஜனவரி மாதம் தற்கொலை செய்துகொண்டார்.

ஆனால் இதுகுறித்து நெதர்லாந்து அரசு தகுந்தமுறையில் விசாரணை நடத்தவில்லை என்று கூறிய லிமொனோவ் பொதுமக்களின் கவனத்தைத் திருப்பவே தங்கள் செயல்வீரர்கள் இதுபோல் நடந்துகொண்டதாகத் தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக தங்கியிருப்போரை அகற்றும் பணியில் சவூதி அரேபியா

## இருவர் உயிரிழப்பு



சவூதியில் சட்டவிரோதமாக தங்கியிருப்போர்களுக்கு எதிரான நடவடிக்கையில் இருவர் பலி.

சவூதி அரேபியாவில் வங்கதேசம், பிலிப்பைன்ஸ், இந்தியா, நேபாள், பாகிஸ்தான், ஏமன் நாடுகளைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர் சட்டவிரோதமாக தங்கியியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் தங்கள் நாடுகளுக்கு திரும்ப செல்லவதற்காக 7 மாத காலம் அவகாசத்தையும் சவூதி அரேபியா வழங்கியுள்ளது. அது முடிவடைந்ததை அடுத்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் மீது நேற்றுமுன்தினம் தேசிய அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதில் ரியாத் அருகிலுள்ள மான்புஹா புறநகரில் சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்களை அகற்றும்பணி மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் பெரும்பாலும் கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. அப்போது அவர்கள் கலவரத்தில் இறங்கினர். கத்தி மற்றும் கற்களை வீசி சவூதி மற்றும் மற்ற வெளிநாட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் சவூதிக்காரர். மற்றொருவர் யார் என்பது இன்னும் தெரியவரவில்லை. மேலும் 28 சவூதி நாட்டினரும், 40 வெளிநாட்டவர்களும் இதில் படுகாயமடைந்தனர். 561 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஒத்திகையில் குண்டு வெடிப்பு



பிரான்சில் இசை நிகழ்ச்சிக்கான ஒத்திகையின் போது அரங்கில் நேற்றுமுன்தினம் குண்டு வெடித்ததில் ஒருவர் பலியானார், 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசின் தென்மேற்கு பகுதியில் விளையாட்டு அரண்மனை என்ற மிகப் பெரிய அரங்கத்தில், ஏராளமான கலை, அரசியல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

அரங்கின் உள்ளே இசை கலைஞர்கள் ஒத்திகையில் ஈடுபட்டிருந்தனர், தொழில்நுட்ப கலைஞர்கள் வண்ண விளக்குகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் அரங்கின் உள்ளே திடீரென குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் ஒருவர் பலியானார், 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

இவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிட மாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று நடைபெற இருந்த நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டது. இது தீவிர வாதிகளின் வேலையாக இருக்குமோ என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாரிஸ் நகரில் கடந்த 1759 ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சி பற்றிய வரலாற்று இசை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

*(5 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

## நல்லிணக்கத்துக்கான...

மேலும், நிதி தேவைப்படும்போது, வடக்கிலுள்ள பல்வேறு விசுவாசத்தை அடிப் கொண்ட நிறுவனங்கள் குவித்து வைத்திருக்கும் பாரிய நிதி வளங்கள் மற்றும் பௌதீக சொத்துக்களை வட மாகாணத்தின் அபிவிருததிக்கு திறந்துவிடும் விடயம் பற்றி நான் கடுமையாக விவா்திக்க விரும்புகிறேன். முதலமைச்சர் ஒரு பக்தியுள்ள இந்துவாகவும் மற்றும் நம்பிக்கையை அடிப்படையாக கொண்ட நிறுவனங்களுடன் பரஸ்பர ஒத்துணர்வையும் கொண்டவராக இருப்பதால், பணக்கார இந்துக் கோவில்கள் வடமாகாணசபையின் அபிவிருத்தி மேம்பாட்டுக்கு பங்களிப்பை வழங்கும்படி வற்புறுத்த வேண்டும்.

வரலாற்று ரீதியாக பெருந்தொகையான வட பகுதி மக்கள் சமூகத்திலுள்ள சாதிப் பிரிவினையின் அடிப்படையில் பாகுபாடு, உடமை பறிக்கப்படல், மற்றும் விலக்கப்படல் போன்றவற்றை எதிர்கொள்வது, தமிழ் சமூகத்தை பலவீனமடையச் செய்கிறது. எனவே சமூக வரையறையிலிருந்து கணிசமானளவு விகிதமான தமிழ் மக்களை உயர்த்துவதற்கு ஏற்ற கொள்கைகளை அறிமுகப்படுத்துவதற்காக வட மாகாணத்தில் முதன் முறையாக சாதிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டியது அவசியம். நாட்டிலுள்ள மாற்று இன சமூகங்களை ஒத்த அரசியல் சமத்துவத்தை தமிழ் சமூகம் மேம்படுத்த விரும்பினால், வடக்கிலுள்ள அதன் சொந்த சமூகத்துக்கும் அதே சமத்துவத்தை வழங்க வேண்டும். தமிழ் சமூகத்தின் சாதிப் பிரிவினையை, நாட்டிலுள்ள இனச் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ராஜபக்ச ஆட்சி மூடி மறைப்பதுபோல மூடி மறைக்க முடியாது.

மாகாணத்தில் பெண்கள்தான் பெரும்பான்மையான பாலினம். நாட்டிலுள்ள 25 மாவட்டங்களின் சனத்தொகையிடையே யாழ்ப்பாண மாவட்டம்தான் தனது சனத்தொகையில் அதிகளவு பங்காக பெண்களை கொண்டிருக்கிறது. எனவே வட மாகாணப் பெண்களுக்கு மாகாணத்தின் பொருளாதாரம், அரசியல், மற்றும் சமூக இடைவெளிகளில் அவர்களுக்கு உரிய பங்கினை வழங்க வேண்டும். வட மாகாணத்தில் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் மற்றும் முன்னாள் போராளிகள் மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளதுடன் பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் சமுதாயததிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்.

அரை மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் புலம்பெயர் சமூகத்தை சேர்ந்தவர்கள் உலகெங்கும பரந்து வாழ்கிறார்கள், வடக்கு மாகாணசபை இவர்களிடமிருந்து மனிதவள மற்றும் நிதி முதலீடுகளை கவருவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

கடந்த காலத்திலிருந்து பாடங்கள் கற்றுக்கொண்டு எதிர்காலத்தை பற்றி கற்பனை செய்வதை எதிர்நோக்கும் தருணம் இது. எதிர்காலத்தை பற்றி முக்கிய சுயவிமர்சனங்கள் மற்றும் சுயபரிசோதனைகள் செய்துகொள்ளவது அதன் பங்களிப்புக்கு இன்றியமையாதாக உள்ளது. வடக்கு மாகாணசபை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான நியாயமான பாதையை காட்டுவதுடன் மற்றும் நிச்சயமாக அபிவிருத்தியை எமது தேசிய அரசாங்கத்துக்கும் செய்து காட்டவேண்டும்.

# வன்னி ஆங்கில ஆசிரியர்களுக்கு மன்னாரில் பயிற்சிப் பட்டறை

(மன்னார்)

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆங்கில பாட ஆசிரியர்களின் மொழித்திறன் மற்றும் கற்பித்தல் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக மன்னார் மாவட்ட மும்மொழிச் சங்கத்தின் அனுசரணையுடன் வன்னி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 75 ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்று மன்னாரில் ஆரம்பமாகியது.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள வட மாகாண ஆங்கில உதவிப் பயிற்சி மையத்தில் குறித்த பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

வன்னியின் 4 மாவட்டங்களையும் சேர்ந்த 75 ஆசிரியர்களே குறித்த பயிற்சிப் பட்டறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜே.ஆர்.எஸ். அமைப்பின் நிதியுதவியுடன் குறித்த பயிற்சிப் பட்டறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நேற்று ஆரம்பமாகிய இப்பட்டறை எதிர்வரும் 20 ஆம் திகதி வரையான 10 தினங்கள் இடம்பெறும்.

நேற்றைய ஆரம்ப நிகழ்வின் போது மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம்.சியான் மற்றும் வடமாகாண ஆங்கில மத்திய நிலைய முகாமையாளர் எஸ்.ஏ.ராஜன் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேச ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இதுவரை இடம்பெறாத நிலையில் வடமாகாண கல்வித் திணைக்களம் குறித்த ஆசிரியர்களுக்கு இப்பயிற்சியை வழங்க பூரண ஒத்துழைப்பினை வழங்கியுள்ளதாக வடமாகாண ஆங்கில மத்திய நிலைய முகாமையாளர் எஸ்.ஏ.ராஜன் குரூஸ் தெரிவித்தார்.

## வடக்கின்....

திட்டங்கள் அல்லது சமூக கருத்திட்டங்களை மாகாணத்தினுள் அமுல்படுத்தும்போது பெறப்படும் நிதியானது மத்திய அரசினூடாக மாத்திரமே கொண்டுவரப்படல் வேண்டும்.

மாகாண பொதுச்சேவைக்கான ஆளணியானது மத்திய அரசின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினாலேயே தீர்மானிக்கப்படுகிறது. ஏனைய விடயங்களுக்காக மாகாண சபையினால் நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டு மத்திய அரசு அல்லது நாடாளுமன்றத்தின் சம்மதம் பெறப்படவேண்டும்.

எனவே நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுடன் சிறப்பான இணைப்பினைப் பேணுவதுடன் அவர்களுக்கு உரித்தான பன்முகப்படுத்தப்பட்ட விடயப்பரப்பு சார் நன்மைகளை உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு பெற்றுத்தரும் வண்ணம் செயற்படுமாறும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு நான் சிபார்சு செய்கிறேன்.

இலங்கையில் மொத்த நிலப்பரப்பில் வடக்கு மாகாணம் ஏறக்குறைய 13.2% இனைக் கொண்டுள்ளது. 8846.83 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பளவினைக் கொண்ட இம்மாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கியது. இம்மாகாணத்தின் மதிப்பிடப்பட்ட சனத்தொகை 1.207 மில்லியன்களாக 2013 நடுப்பகுதியில் உள்ளது. இம்மாகாணமானது விவசாயத்தை பிரதானமாகவும் கால்நடை மற்றும் மீன்பிடி என்பவற்றை உப துறைகளாக கொண்டமைந்த பிராந்தியமாகவும் நிகழ்கின்றது. இம்மாகாணனமானது ஏறக்குறைய 1/3 பகுதி கரையோரத்தையும், 250000 ஹெக்டெயர் பயிர்செய்யக்கூடிய நிலப்பரப்பையும் பொருளாதார செயற்பாடுகளுக்கு முன்னெடுக்கக்கூடிய வகையில் வளங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. எவ்வாறாயினும் உள்நாட்டு முரண்பாடுகள் நடைபெற்ற காலங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னரான பங்களிப்பானது படிப்படியாக அதிகரித்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

உள்நாட்டு முரண்பாடுகளுக்கு முன்னதாக அதாவது 1980 களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு ஏறத்தாழ 7 வீதமாக இருந்தது. பின்னர் இது எதிர்மறையான போக்கைக் காட்டியது. எவ்வாறிருந்தாலும் விரைவான கட்டுமானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் விரிவாக்கம், வங்கி சேவைகளின் விரிவாக்கம், போக்குவரத்து சேவைகளின் அதிகரிப்பு, அதிகரித்த நெல் விளைச்சல் மற்றும் மீன்பிடி வருமானத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்பவற்றின் மூலம் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது எமது மாகாணம் 2012 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25.9 வீதமான வளர்ச்சியைக் காட்டியிருந்தது.

அத்துடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 4 வீதமான பங்களிப்பினையும் வழங்கியுள்ளது. இது 2011 இல் 3.7 வீதமாக பதிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இம்முன்னேற்றமானது மாகாணத்தில் வளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட்டிருப்பதை குறித்து நிற்கின்றது.

மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் 2011 இல் ரூபா 202000 ஆக இருந்த வடக்கு மாகாணத்தின் தலா வருமானமானது 2012 இல் ரூபா 288000 ஆக அதிகரித்தது மாகாணத்தில் சாதகமான நிலையினைத் தோற்றுவித்திருக்கிறது.

வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய 353272 உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் தமது இடங்களில் மீள குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

2013 ஆம் ஆண்டின் துறைசார் முன்னேற்றம் மற்றும் அடைவுகள் தொடர்பாக பகுப்பாய்வு செய்வதுடன் எதிர்கால தேவைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறுவதும் அவசியமானதாகும். அத்துடன் தேசிய கொள்கை நோக்கங்களினுள் உள்வாங்கப்பட்டுள்ள துறைசார் முன்னுரிமைகள் மாகாண அபிவிருத்தி சட்டத்தின் மாகாண நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளில் சரியான முறையில் இடம்பெறுவதனை கவனத்திற்க கொள்ளவேண்டும் என்பதும் மிகமுக்கியமானதாகும் என்றும் தெரிவித்தார். அத்துடன் துறைசார்ந்த விடயங்களையும் அவர் தனதுரையில் தொட்டுச் சென்றார்.

நேற்றுக் காலை 9.05 மணியளவில் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் வருகைதந்தபோது அவருக்கு பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையும் செங்கம்பள வரவேற்பும் அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் பேரவை மண்டபத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து தனது முதன்மை உரையை நிகழ்த்தினார். (இ,க)

## 4 பிரேரணைகள்...

தகவல்களைத் திரட்டும் பொருட்டு விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை கந்தையா சர்வேஸ்வரன் முன்மொழிந்தார்.

மேலும் மாகாண சபை உறுப்பினர் பரம்சோதியினால் யாழ். மாநகரசபையில் தற்போது ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்கான அறிவித்தல் விடப்பட்டுள்ளதாகவும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் வடக்கு மாகாணத்துக்கான ஆளுநராக சிவில் சேவை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைப்பது என்ற பிரேரணையை மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் முன்மொழிந்தார். அதனையும் சபை ஏற்றுக் கொண்டது.

இதேவேளை வட மாகாண சபையின் அடுத்த அமர்வு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (இ,க)

## ஆளுநரின்...

உறுப்பினர்களும் சபையை விட்டு வெளியேறிச் சென்றனர்.

ஜனாதிபதியின் பிரதிநிதியாக விளங்கும் ஆளுநரின் உரையை புறக்கணிப்பது என்று நாம் தீர்மானித்திருப்பதால் சபையை விட்டு வெளியேறுகிறோம் என்று தெரிவித்து விட்டு சிவாஜிலிங்கம் வெளியேறிச் சென்றார். அவரைத் தொடர்ந்து ஏனைய இரு உறுப்பினர்களும்வெளியேறிச் சென்றனர்.

இது தொடர்பாக சிவாஜிலிங்கம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார். (இ,க)

## மாகாண...

வவுனியா மாவட்ட சிவில் அமைப்புக்களின் ஒன்றியமும் சமூக ஒற்றுமைக்கான மக்கள் பேரவையும் வவுனியா" என இத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் சபையின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இத்துண்டுப்பிரசுரம் கோவைகளுள் வைக்கப்பட்ட விடயம் குறித்து தாம் கவனத்தில் எடுப்பதாக தவிசாளர் தெரிவித்ததாக சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (இ,க)

# கொழும்புத்துறையில் வியாபார நிலையத்தில் திருட்டு




(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள செட்டி கடையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த கடையின் முன்பக்க கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள் உணவுப்பொருட்கள், பீடி, சிகரெட் மற்றும் ஒருதொகைப் பணம், காசோலை என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொதுமக்கள் செறிந்து வாழும் இப்பகுதியில் இடம்பெற்ற திருட்டினால் அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சத்துடன காணப்படுகின்றனர். (எஸ்.பி)

## சனல் - 4...

வலயம் படத்தின் இயக்குநருமான கெலம் மக்ரே விமான நிலையத்தில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைக்கப்பட்டாரென சனல் - 4 ஊடகவியலாளரான ஜொனாதன் சமூக வலைத்தளங்களுக்கு செய்திகளை உடனடியாக அனுப்பினார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படவில்லை என சனல் - 4 ஊடகவியலாளர் கெலம் மக்ரே தெரிவித்துள்ளார்.

புலிகளிடம் நான் சம்பளம் பெற்றுக்கொள்ளவில்லை. நான் ஓர் படைப்பாளி, படைப்பாளி தனக்கு விருப்பமான ஓர் படைப்பை உருவாக்கும் உரிமை காணப்படுகின்றது. விடுதலைப் புலிகளும் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். அது தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றேன்.

எனினும், பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவே இம்முறை இலங்கைக்கு விஜயம் செய்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

## வன்முறை....

அணி போட்டுக் கொண்டது. இதனை பார்வையாளர் தரப்பிலிருந்த எதிரணி ஆதரவாளர்கள் முறையற்ற கோல் என வாதிட்டதுடன் மைதானத்திற்குள் அத்துமீறி பிரவேசிக்க முற்பட்டனர். அவர்களைப் போட்டி ஏற்பட்டாளர்கள் தடுக்க முற்பட்டனர்.

இதன் காரணமாக போட்டி ஏற்பாட்டாளர்களுக்கும், அத்துமீறி பிரவேசிக்க முற்பட்டோருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. போட்டிக் களத்தில் இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் மெல்ல மெல்ல வன்முறைக் களமாக மாறியதுடன் கைலப்பு, வாள் வெட்டு என அதன் உச்ச நிலையைத் தொட்டது. இதனால் பார்வையாளர்கள் நலாபுறமும் சிதறியோடினர். இதில் பொலிகண்டி விண்மீன் வீரர் த.தவக்குமார் (வயது-19), மயிலங்காடு அணி ஆதரவாளர்களான அருமைநாயகம் அருள்தாஸ் (வயது-39), பாலச்சந்திரன் இமயகாந்தன் (வயது-35) ஆகியோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் தவக்குமார் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையிலும், ஏனைய இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவமானது, ஆதரவாளர் தரப்பினருக்கும், ஏற்பாட்டாளருக்குமிடையில் இடம்பெற்றதாகவும், இதில் இரு வீரர்களுக்குமிடையில் எவ்வித சம்பந்தமும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சம்பவம் அறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார், அனைவரையும் கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தியதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கோடரி, மண்வெட்டி பிடிகள், 2 சிறிய வாள், கிரிக்கெட் துடுப்பு மட்டை என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டன. (116,12,109,18)

## மன்மோகன்...

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மன்மோகன் சிங் வரவில்லை என்பதால் பொதுநலவாய மாநாடு நடைபெறாமல் இருந்துவிடப் போவதில்லை. இலங்கையில் நடைபெறும் ஏனைய மாநாடுகளை விடவும் இந்த மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துள்ளோம்.

இலங்கையில் மனித உரிமைகள் பற்றியும் ஊடகசுதந்திரம் பற்றியும் பேசப்படுகின்ற நேரத்தில் கலந்துகொள்ள நாம் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறோம். கட்டுப்பாடின்றி திறந்து விட்டிருக்கிறோம். சிலர் விசா மறுத்தாலும் நாம் அவ்வாறு செய்யவில்லை.


அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர், குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறியதாலேயே நாட்டைவிட்டு திருப்பி அனுப்பப்பட்டனர் எனக் கூறினார்.

மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இதில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். எனினும் அவர்கள் வருவது வராதது அவரவர் விருப்பம்.

இந்தியப் பிரதமருக்கும் நாம் அழைப்பு விடுத்தோம். எனினும் இந்த மாநாட்டில் கலந்துக்கொள்ள முடியாத தனிப்பட்ட பிரச்சினை அவருக்கு இருக்கலாம். இது குறித்து அவர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பொதுநலவாய விழுமியங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம்

## ஜனாதிபதியிடம் கோரும் ஐ.தே.க.



ஜனாதிபதி பொதுநலவாயத்தின் தவிசாளராகியதும், இப்போது போலவன்றி இவர் பொதுநலவாயத்தின் விழுமியங்களை அச்சொட்டாக நடைமுறைப்படுத்த வேண்டியிருக்குமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

பொதுநலவாயத்தின் தவிசாளர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுநலவாயத்தின் 16 விழுமியங்களை பின்பற்றவேண்டும்.

அவர் மெதமுலான மகிந்தவாக இனிமேல் நடந்து கொள்ளக் கூடாது, என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தனாயக்க கூறினார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய அமைப்பு கொள்கையின்படி முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை நீக்கியது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

ஷிராணி பண்டாரநாயக்க நீக்கம் குறித்து பொதுநலவாய அமைப்பு செயலாளர் நாயகத்திற்கு இரண்டு தரப்பு அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன. அது அவரது மேசையில் உள்ளது.

சுற்றுலா விசாவில் வந்த வெளிநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசா சட்டத்தை மீறியதாக கூறப்படுகின்ற போதும் ஜேம்ஸ் பெக்கர் அதனை செய்யும் போது அவருக்கு எதிராக ஒன்றுமில்லை.

ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன், சம்பந்தனை சந்தித்து பேச முடியும் என்றால் அவர்கள் வெளிநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஏன் பேச முடியாது?

ஐ.தே.க.வின் புதிய தலைமைத்துவ சபையின் ஆரம்பக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம் பெறும்.

சஜித் பிரேமதாஸ தலைமைத்துவ சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகி வேறு இடத்தில் ஊடக சந்திப்பு நடத்துவது குறித்து தலைமைத்துவ சபை ஆராயும்.

இந்தியப் பிரதமர் மாநாட்டுக்கு வராமல் இருப்பதன் மூலம் இலங்கை அயல் நாட்டுடன் பேணும் இராஜதந்திர உறவு அம்பலமாகிறது என திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

# மாகாண உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற வடமாகாண சபையின் இரண்டாவது அமர்வின் போதே மாகாண சபை உறுப்பினர்களால் இக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தமக்கான அமைச்சுக்களின் பொறுப்புக்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், தமக்கான திணைக் களங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு தமது அறிமுகம் இல்லாமையால் தாம் பிரச்சினைகளைச் 'சந்திப்பதாகவும், திணைக்கள அதிகாரிகளுக்கு தமது விபரங்களை மாகாண சபைப் பேரவை அறிவிக்க வேண்டும் எனவும் சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். (இ,க)

# ஆளரவமற்ற வீட்டிலிருந்த 15 வயது சிறுமி, இளைஞர் கைது

(கல்வயல்)

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் வீடொன்றில் தனிமையிலிருந்த பதின்ம வயதுப் பாடசாலைச் சிறுமியும், இளைஞரொருவரும் நேற்றைய தினம் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த 15 வயதுச் சிறுமி பாடசாலை செல்வதாகத் தெரிவித்துவிட்டு மேற்படி இளைஞனுடன் சென்று ஆட்கள் எவருமற்ற வீட்டில் தனியாக இருந்துள்ளார். இந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற அவர்கள் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவுள்ளார். (இ)

### சாதாரண தர மாணவர்களுக்கு

# துரிதகதியில் விநியோகிக்கப்படும் தேசிய அடையாள அட்டை

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக இதுவரையில் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் 25 ஆயிரம் அடையாள அட்டைகளை பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்க வேண்டியுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ்.சரத்குமார கூறியுள்ளார்.

பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அடையாள அட்டை விநியோகம் துரிதமாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

உரிய வயது பூர்த்தியான மாணவர்களுக்கு ஏற்கனவே தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாணவர்களுக்கு வயது பூர்த்தியாகும் அடிப்படையில் அடையாள அட்டைகளை விநியோகிக்க ஆட்பதிவுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்காக இன்று முதல் விசேட கரும பீடங்கள் நிறுவப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல்வேறு குறைப்பாடுகள் காரணமாக ஆட்பதிவுத் திணைக்களத்தில் குவிந்துள்ள விண்ணப்பங்களின் குறைப்பாடுகளை துரித மாக நிவர்த்தி செய்யுமாறு இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# அமைச்சர் மட்டக் கூட்டங்கள்; விரக்தியடையும் பிரிட்டன்



(கொழும்பு)

பொதுநலவாய அமைச்சர்மட்ட நடவடிக்கைக்குழு அதன் கூட்டங்களில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்து ஆழமாக நோக்கத் தவறியுள் ளது என்பதையிட்டு விரக்தியடைந்துள்ளதாக பிரித்தானியா கூறியுள்ளது.

விசனத்துக்குரிய விடயங்களை விசேடமாக பொதுநலவாய அங்கத்தவர்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டத்தில் பொதுநலவாய நியமனங்களை நிறைவேற்றத் தவறும் விடயங்களை பொதுநலவாயம் கவனிக்க வேண்டுமென்பதனை பொதுநலவாய அமைச்சர்மட்ட நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் மத்தியில் நாம் வலியுறுத்தியிருந்தோம். ஆயினும், இது நடைபெறவில்லை என்பதையிட்டு நாம் விரக்தியடைகின்றோம் என பிரிட்டனின் சிரேஷ்ட இராஜங்க அமைச்சர் சயீடா வரஸி பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கூறினார்.

ஐக்கிய இராஜ்ஜியம் பொதுநலவாய அமைச்சர்மட்ட நடவடிக்கைக்குழு உறுப்பினர் அல்ல . இவ்வருடம் 26 செப்ரெம்பரில் பொதுநலவாய வெளிநாட்டமைச்சின் கூட்டத்தில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையை ஐக்கிய இராஜ்ஜியம் கருத்தாடல் செய்ததாக அவர் கூறினார்.

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்காது ஆஸி.

கனடா மற்றும் இந்தியாவுடன் இணைந்து பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்கப்போவதில்லை, என அவுஸ்ரேலியப் பிரதமர் டொனி அபோட் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தொடர்பில் வேறு நாடுகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டிய தேவை அவுஸ்ரேலியாவுக்கு இல்லை எனவும் AAP செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான நாடு என்ற வகையில், மாநாட்டை புறக்கணிக்கும் தேவையில்லை என அவர் கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டின் ஊடாக சட்ட விரோதமாக அவுஸ்ரேலியாவுக்குள் நுழையும் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பது குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மாநாட்டை பகிஷ்கரிப்பது உசிதமான செயற்பாடல்ல

## நியூஸிலாந்து தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை பகிஷ்கரிப்பது, இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை அல்லவென நியூசிலாந்து தெரிவித்துள்ளது.

பொதுநலவாய மாநாட்டின் உறுப்பு நாடு என்ற வகையில் மாநாட்டில் பங்குபற்றுவது மிகவும் அவசியம் என நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு இலங்கையுடனான இருதரப்பு கலந்துரையாடல் அல்லவெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கமைய தாமும் வெளிவிவகார அமைச்சர் மரீ மெக்கலீயும் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக நியூஸிலாந்து பிரதமர் ஜோன் கீ மேலும் தெரிவித்துள்ளார்.

# மாகாண வரவு - செலவுத் திட்டம்; நிதி முன்மொழிவு சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கான 2014 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்குரிய நிதி முன்மொழிவுகள். நேற்றைய மாகாண சபை அமர்வின்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

மாகாண சபையின் நிதிய மைச்சிற்கான விவகாரங்களைக் கையாளும் மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்படி முன்மொழிவுகளை சமர்ப்பித்தார்.

புதிய நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்பதாகவே மேற்படி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது வழமையானதாகும். 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க சட்டத்தின்படி மேற்படி முன்மொழிவை முதலமைச்சர் சமர்ப்பித்தார்.

இந்த முன்மொழிவில் மாகாண சபைக்கான நிதி மூலங்கள் தொடர்பாகவும் அவற்றின் ஊடாகக் கிடைக்கும் நிதியின் அளவு குறித்தும் தெளிவுபடுத்தினார். (இ,க)

# வடக்கிற்கு வந்த ஊடகவியலாளர்கள் வவுனியாவில் தடுத்து வைப்பு

பொது நலவாய மாநாட்டையொட்டி வருகை தந்துள்ள சர்வதேச ஊடகவியலாளர்கள் சிலர் நேற்று வடக்கிற்கு விஜயம் செய்ய முற்பட்ட வேளையில் வவுனியாவில் நீண்ட நேரம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

சனல் - 4 லைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் வருகை தந்துள்ளனர் என புலனாய்வாளர்களுக்கு தகவல் கிடைத்ததையடுத்தே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் இவர்களில் சனல்-4 லைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதனை உறுதி செய்ததன் பின்னர் ஊடகவியலாளர்களை வடக்கிற்கு செல்ல அனுமதித்துள்ளனர்.

கார் ஒன்றில் வடக்கு நோக்கி முதலில் சென்ற சர்வதேச ஊடகவியலாளர்களை வவுனியா கல்குணாமடு பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் பகுதியில் தடுத்து நிறுத்திய பொலிஸார் சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் வடக்கு நோக்கிச் செல்ல அனுமதித்த போதிலும் ஓமந்தை சோதனைச்சாவடியிலும் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து வான் ஒன்றில் வடக்கு நோக்கி பயணித்த சில சர்வதேச ஊடகவியலாளர்கள் மீண்டும் கல்குணாமடு பொலிஸ் காவலரணில் சுமார் 5 மணிநேரம் தடுத்து நிறுத்தப்பட்டு அவர்கள் தொடர்பிலான விபரங்களை பெற்றதன் பின்னர் வடக்கு நோக்கி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.